Gal-Oya
Plantations (Pvt)
Limited

# 2018/19

# கல்ஓயா பெருந்தோட்ட தனியார் கம்பனி
# வருடாந்த அறிக்கை



# புறவரை

## கல்ஓய



1997 முதல் மூடப்பட்ட முன்னைய வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனி கைத்தொழில்களை மீள்-உயிர்ப்பூட்டும் நோக்கத்திற்காக 2007இல் கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை.) லிமிற். (GOPL) உருவாக்கப்பட்டது.

ஹிங்குரான சுகர் இன்டஸ்ரீஸ் (பிறை) லிமிற்றெற்றைப் புனரமைப்பதற்கும் அத்துடன் தொழிற்சாலையைச் சார்ந்திருந்த காணிகளில் மீள்-செய்கையை மேற்கொள்வதற்கும் அக்கறையைக் கொண்ட தரப்புக்களிடமிருந்து அக்கறையின் வெளிப்படுத்தலுக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பொதுசன சீர்திருத்தங்களுக்கு ஆணைக்குழு அழைப்புவிடுத்தது.

அரசாங்க தனியார் பங்காண்மையொன்றினுள் பிரவேசிப்பதற்கும், அவ்வாறாக அச் சமயத்தில் கைவிடப்பட்டிருந்த சீனித் தொழிற்சாலையை உயிர்ப்பூட்டுவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு முன்மொழிவொன்றை பிரவுன் அன்ட் கம்பனி PLC மற்றும் லங்கா ஓரிக்ஸ் கம்பனி PLC ஆகியவற்றின் தலைமையிலான கூட்டாண்மை முன்வைத்திருந்தது.

முன்மொழிவைப் பின்துரந்து இலங்கை அரசாங்கத்திற்கும், கூட்டாண்மைக்கும் இடையில் இணைக் கூட்டுமுயற்சியொன்றாக கம்பனியொன்று உருவாக்கப்பட்டது. மேலதிகமாக,பிரத்தியேக முகாமைத்துவ முகவராக கல்ஓய ஹோல்டிங்ஸ் (பிறை.) லிமிற்றெற்றை கூட்டாண்மை நியமித்தது.

பெருந்தோட்டமானது 4,400 குடும்பங்கள் மத்தியில் ஒதுக்கப்பட்ட அண்ணளவாக 5,200 ஹெக். கொண்ட செய்கை பண்ணக்கூடிய விஸ்தீரணத்துடன் 7,659 ஹெக். கொண்ட காணியைக் கொண்டிருந்தது. பகுதியின் ஏனைய பகுதியானது தொழிற்சாலைக் கட்டிடங்கள், வீடமைப்புத் தொகுதிகள், மேட்டு நில ஒதுக்குகள்,வயல் வீதிகள் மற்றும் வடிகால் அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வரிப்பத்தான்சேனை, கல்கமுவ, தீகவாபி, ஹிங்குரான மற்றும் நீத்த என 5 பாரிய வலயங்களாக கருத்திட்டப் பகுதி பிரிக்கப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்

கல்ஓய


தொலைநோக்கு........................................................................ 3
செயற்பணி........................................................................ 4
முக்கிய சிறப்பம்சங்கள்...................................................... 5
நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை.......................................... 7
பிரதம செயற்பாட்டு அலுவலரின் அறிக்கை........................................ 9
நிதிசார் சிறப்பம்சங்கள்...................................................... 11
பங்குதாரர்களின் மூலதனம்...................................................... 13
பணிப்பாளர் சபை........................................................................ 15
சிரேஷ்ட முகாமைத்துவம்...................................................... 17
கம்பனியின் கட்டமைப்பு...................................................... 19
பயிர்ச்செய்கை........................................................................ 20
சீனி உற்பத்தி........................................................................ 25
வடிசாலை........................................................................ 31
உயிரக கூட்டுப்பசளை செயலாக்க அலகு.......................................... 35
ஊழியர்கள்........................................................................ 37
எதிர்காலக் கருத்திட்டங்கள்...................................................... 40
பணிப்பாளரின் அறிக்கை...................................................... 42
பணிப்பாளர்களின் பொறுப்பின் கூற்று.......................................... 45
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.............................................. 47


## நிதியங்கள் - 2018/2019


தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கை.......................................49
இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் மற்றும் வேறு விரிவான வருமானத்தின் கூற்று.. 57
நிதிசார் நிலைமையின் கூற்று..................................................58
ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று..............................................59
பணப் பாய்வின் கூற்று..................................................60
நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள் ..............................................61
ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் அறிவித்தல் .......................................... 85
பதிலியின் படிவம் .................................................................. 86
கூட்டாண்மைத் தகவல் .............................................................. 88




# தொலைநோக்கு

பயனுரித்தாளர்களின் குறிக்கோள்களைத் தெளிவாக அறிந்துகொண்டு, உயர்வான உற்பத்தித்திறனைத் துரிதப்படுத்துவதற்கும் அத்துடன் பசுமைச் சூழலுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை சந்தை தலைமைத்துவத்தை அடைவதற்கும் இலங்கையில் கரும்புக் கைத்தொழிலை மீள்-கட்டியெழுப்புவதே எமது பெருவிருப்பமாகும்.



# செயற்பணி

கிழக்கு மாகாணத்தில் சீனி கைத்தொழிலை மீள் கட்டியெழுப்புவதற்கும் அத்துடன் உயர்வானதும், தொடர்ச்சியானதுமான வருமானத் தோற்றுவிப்பினைத் தோற்றுவிப்பதற்கான சூழலுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை, தாபனத்தில் உயர்ந்தளவிலான திறனையும், செயல்நோக்கத்தையும், வாழ்க்கைத்தொழிலையும், இயக்காற்றலையும் அத்துடன் ஒழுக்கநெறியையும் கொண்ட ஊழியர்களைக் கட்டியெழுப்புவதற்கும் உத்தேசத்தைக் கொண்டுள்ள சகல கிட்டுகின்ற மூலவளங்களின் அதிகபட்ச பயன்பாடு.



# முக்கிய சிறப்பம்சங்கள்

கல்ஓய

## கமப்பொருளியலுடன் செய்கையிலான விஸ்தீரணம் (ஹெக்.)




## கரும்பு அறுவடை (மெ.தொ.)



## நொறுக்கப்பட்ட கரும்பு (மெ.தொ.)




## சீனி உற்பத்தி (மெ.தொ.)




## மொலாசஸ் உற்பத்தி (மெ.தொ.)



# நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை

கல்லோய



**தனேஷ் அபேரத்ன**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**கல்லோய பிளான்டேஷன்ஸ் (பிறை.) லிமிற்.**

2019ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான கல்லோய பிளான்டேஷன்ஸ் (பிறை) லிமிற். நிறுவனத்தின் செயல்திறனைப் பற்றி அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஹிங்குரான கல்லோய பள்ளத்தாக்கில் உள்ள சீனி தொழிற்சாலை 60களில் “ஆசியாவின் இராட்சசன்” என்று அழைக்கப்பட்டது. நவீன இயந்திரங்களுடன் இப்பகுதியில் மிகப்பெரிய சீனி பொறித்தொகுதிகளில் ஒன்றாக கட்டப்பட்ட தொழிற்சாலை 1960இல் திறக்கப்பட்டது. இருப்பினும், தவறான நிர்வாகம், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க சிக்கல்கள் ஆகியன காரணமாக, 1993இல் அதன் செயல்பாடுகள் மூடப்பட்டன. பின்னர் ஆதனத்தை மீண்டும் குறிப்பிடுவதற்கு புதிய முதலீட்டாளர் கண்டுபிடிக்கப்படும் வரை ஆதனத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இலங்கை அரசாங்கத்திற்கும் (GOSL) கூட்டாண்மைக்கும் இடையிலான ஒரு கூட்டு முயற்சியாக 2007ஆம் ஆண்டு கல்லோய பிளான்டேஷன்ஸ் உருவாக்கப்பட்டதுடன், கைவிடப்பட்ட இந்த சீனி பொறித்தொகுதியைப் புத்துயிரூட்டுவதற்காக அங்கு 51% உரிமையை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளதுடன், 49% உரிமையை பிரவுன் அன்ட் கம்பெனிPLC (BCL) மற்றும் LOLC ஆகியனவற்றைக் கொண்டுள்ள கூட்டு கம்பனிகொண்டுள்ளது.

கல்லோய பெருந்தோட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், ஹிங்குரான சீனி தொழிற்சாலையை அதன் பழைய பெருமைக்கு மீள நிறுவுவது ஒரு கடினமான யுத்தமாக இருந்தது. நாங்கள் செயற்பாடுகளை மீளமைத்த நேரத்தில், முன்னர் சீனிச் செய்கையிலும் மற்றும் உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் பலர் கடந்த காலங்களில் தாங்கள் அனுபவித்த பல்வேறு பிரச்சினைகள் காரணமாக நம்பிக்கையை கைவிட்டிருந்தனர். எனவே, ஆரம்பத்தில், அவர்களின் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் மீண்டும் ஒருமுறை மீட்டெடுக்க, வீடு வீடாகச் சென்று பிரச்சாரம், குழு விவாதம், கூட்டங்கள் போன்றவற்றின் மூலம் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பெரும் முயற்சிகளும் மற்றும் முதலீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

31 மார்ச் 2019இல் உள்ளவாறு,கல்ஓய பிளான்டேஷன்ஸ் ஹிங்குரான சீனி தொழிற்சாலையின் மறுமலர்ச்சிக்காக ரூ. 9.598 பில்லியனை முதலிட்டுள்ளது. ஆண்டு விற்றுமுதல் ரூ. 2017/18இல் முந்தைய ரூ.1,243 மில்லியனிலிருந்து 2,023 மில்லியன். கல்ஓய தோட்டங்களின் தயாரிப்புகளில் தற்போது சீனி (ஒரு நாளைக்கு 2,000 தொன்),ENA (ஒரு நாளைக்கு 21,500 லீட்டர்கள்), உயிரகக் உரம் மற்றும் 2 மெகாவாட் மின்சாரம் ஆகியவை உள்ளன.

பின்தொடர்ந்து வரும் ஆண்டுகளில் சீனித் தொழிற்சாலை திரிவுபடுத்தல்களுக்கு 25%ஆல் கரும்பு நொருக்கும் ஆற்றலளவை அதிகரிப்பதையும்,2MW இலிருந்து 10MWக்கு பின்தோற்றுவிப்பை அதிகரிப்பதையும், வடிசாலையிலிருந்தும், மதுபான போத்தலில் அடைப்பதிலிருந்தும் வர்த்தக நோக்கத்திற்காக $Co_2$ஐக் கைப்பற்றுவதையும் நோக்கி முதலிடுவதற்கு நிறுவனம் மேலும் நம்பிக்கையை கொண்டுள்ளது.

வறுமை உயர்வான மட்டமொன்றில் உள்ள அம்பாறை, சியம்பலாந்துடுவ போன்ற பகுதிகளில் நேரடியானதும், மறைமுகமானதுமான தொழில் வாய்ப்புக்களை கல்ஓய பிளான்டேஷன்ஸ் ஏற்கனவே உருவாக்கியுள்ளது. ஏற்கனவே 1,000க்கு மேற்பட்ட நேரடி தொழில் வாய்ப்புக்களும் அத்துடன் 18,000க்கு மேற்பட்ட மறைமுகமான தொழில்வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய வருமானப் பிரிவுகளுடன் சனசமூகத்தில் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கு இது ஆதரவளித்துள்ளது. தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் கடந்த சில வருடங்களின் போது கணிசமானளவு முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலையின் காரணமாக, அதிகளவு தொழில்கள் இருந்துள்ளதுடன், இது ஊழியர்களின் நிதிசார் சூழ்நிலையையும் அத்துடன் அவர்களது சேமநலனையும் மேம்படுத்துவதற்கு அளப்பரிய விதத்தில் உதவியுள்ளது. உதாரணமாக கூடிய சீக்கிரத்திலேயே மூடப்படும் கடைகள் தற்போது வியாபாரத்திற்கு நள்ளிரவு வரை திறந்திருக்கின்றன.

ஹிங்குரான சீனித் தொழிற்சாலை புத்துயிருட்டலானது உட்கட்டமைப்பினை, விசேடமாக அவர்கள் வேலைசெய்யும் பகுதிகளில் வீதிகளையும், கால்வாய்களையும் முன்னேற்றுவதற்கான பாதையையும் உருவாக்கியுள்ளது. இலகுவான அணுகுதலுக்காக உட்புற வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியுடன் கால்வாய்கள் புதுப்பிக்கப்படுகின்றன. கமக்காரர் கொடுப்பனவுகள், டிரக்டர் கொடுப்பனவுகள், சம்பளங்கள், செயற்பாடுகளுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்தல் ஆகிய வழிகளில் இந்த சனசமூகங்களின் வருமானத்தை மேம்படுத்துவதன் மூலம் 2011 முதல் ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக ரூ.3 பில்லியனை கல்ஓய பிளான்டேஷன்ஸ் செலவழித்துள்ளது. மேலும், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் மத வழிபாட்டிடங்கள், பாடசாலைகள்,வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு நாம் ஆதரவளிக்கின்றோம்.

எங்கள் தயாரிப்புகளில் இருந்து இறக்குமதி மாற்று மூலம் கம்பனி கிராமப்புற பொருளாதாரத்திற்கும் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கும் பங்களிக்கிறது.

**பங்குதாரர்கள், புகழ்பெற்ற அமைச்சுக்கள் மற்றும் அதிகாரிகள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன். எங்கள் நிர்வாகப் பணியாளர்கள், அனைத்துப் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு இல்லாமல், எங்கள் கம்பனி இந்த குறிப்பிடத்தக்க சாதனையைப் பெற முடியாது என்பதனால் நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.**

**தனேஷ் அபேரத்ன**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை.) லிமிற்.**



# பிரதம செயற்பாட்டு அலுவலரின் அறிக்கை

## கல்ஓய

**சுரத் பெரேரா**
**பிரதம செயற்பாட்டு அலுவலர்**
**கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை.) லிமிற்.**

2019ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை) லிமிற். நிறுவனத்தின் செயல்திறனைப் பற்றி அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிதிசார் ஆண்டின் இறுதியில், கரும்பின் கீழுள்ள மொத்தப் பகுதி 5,999 ஹெக்டார்களை அடைந்துள்ளதுடன்,இதுவரை அறிக்கையிடப்பட்ட ஆகக்கூடுதலான கரும்புப் பகுதி இதுவாகும். எமது நிறுவனத்திற்குச் சொந்தமான கரும்புக் காணிகள் வாரிப்பத்தான்சேனை, கல்மடுவ, ஹிங்குரான, நீத்த, தீகவாபிய ஆகிய பாரிய வலயங்களுக்கு நீடிப்பதுடன், அம்பாறை மற்றும் சியம்பலாந்துவ ஆகியன வெளி வளர்ப்போர் பகுதிகளாக விளங்குகின்றன. 2018/2019 ஆண்டு முழுவதும் 3,380 ஹெக்டார் கொண்ட நடுகை செய்திட்டத்தை நாம் நிறைவேற்றினோம். மேலும், நிதிசார் ஆண்டொன்றில் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் ஆகக்கூடுதலான தொகை 32,422 மெ.தொன்களாக இக்காலத்தின் போது அறிக்கையிடப்பட்டது.

2918/2019 வர்த்தகக் கரும்பு பருவத்தின் போது, எமது கரும்பு செய்கைபண்ணப்பட்ட வயல்களில் இருந்து 152,915 மெ.தொன்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. கரும்பு விநியோகத்தின் மீதான அடிப்படையில் 6.74 என்ற விளைச்சலில் 9,565 மெ.தொ. சீனியையும், 8.076 மெ.தொ. மொலாசையும் கம்பனி உற்பத்தி செய்தது. மேலதிகமாக, இந்த வருடம் உற்பத்தி செய்ததும், கடந்த வருடத்தின் தேங்கியிருந்த கையிருப்பினதும் மொலாசசிலிருந்து 4,284,325 லீட்டர்கள் கொண்ட ENAஐ நாம் உற்பத்தி செய்தோம். ஆனால், கூட்டுப்பசளை விற்பனையின் தீவிரமயமாக்கலின்மையின் காரணமாக, காலத்திற்கு 1,700 மெ.தொ. கொண்ட உயிரக கூட்டுப்பசளைகளை மட்டுமே நாம் உற்பத்தி செய்தோம்.

தற்போது கல்ஓய பிளான்டேஷனில் உற்பத்திப் பொருட்கள் சீனி,ENA, உயிரக கூட்டுப்பசளை மற்றும் 2MW கொண்ட மின்சாரம் (சொந்த நுகர்வு) ஆகியவற்றைக் கொண்டுள்ள கைத்தொழிலின் நீண்டகால நிலைத்திருக்கும் தன்மைக்கும், வளர்ச்சிக்கும் பெருமளவு புதிய கருத்திட்டங்கள் திட்ட நிலையில் உள்ளன. சீனித் தொழிற்சாலை திரிபுபடுத்தல்களுடன் 25%ஆல் கரும்பு நொருக்கும் ஆற்றலளவை அதிகரித்தல், 2MWஇலிருந்து 10MWவரை மின் தோற்றுவிப்பினை அதிகரித்தல், வடிசாலையிலிருந்து வர்த்தக நோக்கத்திற்காக $CO_2$ஐ கைப்பற்றுதல், கை தொற்றுநீக்கியின் உற்பத்தி, மதுபானத்தைப் போத்தலில் அடைத்தல் ஆகியன எதிர்காலக் கருத்திட்டங்கள் என்பதுடன், இவை எதிர்காலத்தில் மேம்படுத்தலைக் கொண்டுவரக்கூடிய திட்டமான நீண்டகால தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில், விசேடமாக ஹிங்குரான பகுதியில் நேரடியானதும், மறைமுகமானதுமான தொழில்வாய்ப்புக்களை கல்ஓய பிளான்டேஷன்ஸ் ஏற்கனவே உருவாக்கியுள்ளது. நிதிசார் ஆண்டின் இறுதியில், நாம் 936 நேரடியான தொழில்களை வழங்கியுள்ளதுடன், தற்போது 18,000க்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம். சகல திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் ஆரம்பத்துடன் நேரடியான தொழில்களின் எண்ணிக்கையைப் படிப்படியாக 1,500 வரையும் அத்துடன் மறைமுகமான தொழில்வாய்ப்புக்களை 25,000 வரையும் உயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். புதிய வருமானப் பிரிவுகளுடன் சனசமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இது ஆதரவளிக்கும். தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் கடந்த சில ஆண்டுகளின் போது கணிசமானளவு முன்னேற்றமொன்றை நாம் சான்றுபகன்றுள்ளோம்.

விசேடமாக, விளைச்சலின் வீழ்ச்சியை விளைவித்த கரும்பு நோய்கள், எதிர்பார்க்கப்படாத வெள்ளப்பெருக்கு, விளைச்சலின் வீழ்ச்சியை ஏற்படுத்திய கடுமையான வரட்சி நிலைமை ஆகிய பலதரப்பட்ட காரணங்களின் நிமித்தம், எம்மால் முன்னீட்சிப்படுத்தப்பட்ட இலக்குக்கு குறைவாகவே 2018/19ஆம் ஆண்டில் சீனி உற்பத்தி விளங்கியது. மேலும், பிரதானமாக மோசமான காலநிலை நிலைமைகள், பூச்சி மற்றும் நோய் ஆகியவற்றின் காரணமாக, இந்த வருடத்தின் போது கரும்பிலிருந்து பெறக்கூடிய சீனி வீழ்ச்சியடைந்தது. 205 நாட்களுக்கு செயற்படுவதன் மூலம் நிதிசார் ஆண்டுக்கு 5,000,000 லீட்டர்கள் இலக்கில் ENA உற்பத்தியில் 86%ஐ எம்மால் சாதிக்கக்கூடியதாக இருந்தது. இது பிரதானமாக விற்பனையிலும், எம்மிடம் இருந்த கையிருப்பினதும் காரணமாகும். இதே சிக்கல் உயிரக கூட்டுப்பசளை உற்பத்திக்கும் முகங்கொடுக்கப்பட்டதுடன், இலக்குக்கு எதிராக கூட்டுப்பசளை உற்பத்தியைக் குறைப்பதற்கு நாம் கட்டுப்படுத்தப்பட்டோம்.

சீனிக் கைத்தொழில் ஒரு விவசாயக் கைத்தொழில் என்பதுடன், இது காலநிலை, நோய்கள் மற்றும் அரசாங்கக் கொள்கைகள் போன்ற வெளிப்புறக் காரணிகள் மீது தங்கியுள்ளது. இக் காரணிகள் நேரத்திற்கு நேரம் மாறுபடுவதுடன், கைத்தொழிலுக்கு சாதகமானதும், பாதகமானதுமான சூழ்நிலைகளையும் ஏற்படுத்துகின்றது. உற்பத்தித்திறன், ஆலை/வடிசாலை ஆற்றலளவின் பயன்பாடு மற்றும் செயற்பாட்டின் அளவு ஆகியவற்றின் குறைந்த மட்டங்கள், சரீரஉழைப்பின் பற்றாக்குறை, சீனிக்கும், அதன் உப-உற்பத்திப்பொருட்களுக்கும் தோதான விலையிடல் பொறிமுறையொன்று இல்லாமை, கைத்தொழிலில் பாதுகாப்புக்கு எல்லை நடவடிக்கைகள் மற்றும் ஒரு தோதான சட்டவாக்கமற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டம் ஆகியன சீனி துறையில் பிரதான பிரச்சனைகளில் சிலவாகும். அரசாங்கத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் காரணமாக, சில காலத்தில் உரத்தினதும், களைநாசினியினதும் தட்டுப்பாடும் கரும்பு விளைச்சலைப் பாதித்தது. சில களைநாசினிகளை அரசாங்கம் தடைசெய்துள்ளதுடன், உரத்தின் இறக்குமதியை மட்டுப்படுத்தியுமுள்ளது. ஆனால், திறந்த சந்தையில் இரசாயனங்களினதும் மற்றும் உரங்களினதும் கட்டுப்பாட்டுக்கு மாற்றீடுகள் பரிந்துரைக்கப்படவில்லை. நீர் விநியோகத்தின் பற்றாக்குறை, சில காணிகளில் நீர் தேங்கியிருந்தமை, சில கமக்காரர்களால் மோசமான வேரங்குர முகாமைத்துவம் ஆகியன நாம் நேரகாலத்திற்கு அறுவடை செய்த போதும், விளைச்சலில் வீழ்ச்சியை விளைவித்தது.

திடநம்பிக்கையுடன் முன்னோக்கிய ஆண்டை நாம் பார்ப்பதுடன், கைத்தொழில் சூழல் அதிகளவு உகந்ததாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கின்றோம். பெருந்தோட்டம் தொடர்பான பிரச்சனைகளை வெற்றிகொள்வதற்காக கம்பனியினால் பெருமளவு நிலைத்திருக்கத்தக்க முன்னெடுப்புக்கள் அமுலாக்கப்படுகின்றன. இன பக்கவரைக்கு தாக்குபிடிக்கும் வகைகளை விருத்திசெய்தல் மற்றும் அறிமுகப்படுத்தல், நாற்றுமேடை நடுதலுக்கு வெப்பநீர் பரிகரிப்பிலான ஆரம்பநிலை கரும்பைப் பயன்படுத்தல், வயல் ஆரோக்கியத்தைப் பேணுதல் ஆகியனவும், பூச்சியையும், நோயையும் சமாளிக்கும் வடிகாலமைப்பு வசதிகளை மேம்படுத்தல், நீர்ப்பாசன முறைமையைப் புனரமைத்தல் மற்றும் உயிரக கூட்டுப்பசளையை விநியோகித்தல் ஆகியனவும் ஆகக்கூடுதலான விளைச்சலை அடைவதற்கு வசதியளிக்கும். மேலும், பயிர்ச்செய்கையின் அக்கறையை அதிகரிப்பதற்காக,விவசாயிகள் மத்தியில் உயர்வான பங்கிலாபங்களை ஆரம்பிக்க கம்பனி திட்டமிட்டுள்ளது. பெருந்தோட்டத்தின் இன பக்கவரைக்கு சீனி விளைச்சலிலான வகைகளை அறிமுகப்படுத்தல், சீனித்தொழிற்சாலையில் உள்ள பழைய இயந்திராதிகளிலிருந்து புதுமையான உயர் தொழில்நுட்பத்திலான இயந்திராதிகளுக்கு மாறுதல் ஆகியன பெறக்கூடிய சீனி அடக்கத்தை அதிகரிக்கும்.

கரும்பிற்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள 5,202 ஹெக். விஸ்தீரணம் கொண்ட காணி, 50 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட கமக்காரர்களின் நிபுணத்துவம், நீர்ப்பாசன வசதிகளுக்கும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்குமான அடைதல் மற்றும் கரும்பு விதையினதும், மற்றும் ஆராய்ச்சியினதும் மீது கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துடனான நேரடியான ஒருங்கிணைப்பு மற்றும் ஏனைய பணியாளர்களின் அறிவு மற்றும் அனுபவம் போன்ற குறிப்பிடத்தக்க பலங்களை நிறுவனம் தன்வயம் கொண்டுள்ளது. LOLC PLC மற்றும் பிரவுன் அன்ட் கம்பனி PLC ஆகியவற்றுக்கு சொந்தமான பங்கானது கம்பனியின் ஆரம்பத்திலிருந்து கல்ஓய பிளான்டேஷனில் முகாமைத்துவத்திற்கு மிக அதிகளவு ஆதரவை வழங்கியுள்ளது. இக் காரணிகள் சந்தையொன்றை அடைவதற்கு நிறுவனத்தை முன்வைத்துள்ளதுடன், இது அதன் சீனி உற்பத்தியின் கிராக்கியை நிறைவேற்றுவதற்கு விநியோகம் போதாததாக தொடர்ந்துமே இருக்கும்.

**காலம் முழுவதும் தொடர்ச்சியான ஆதரவுக்காக இலங்கை அரசாங்கத்திற்கும், அமைச்சுக்களுக்கும், திறைசேரிக்கும், அரசியல்வாதிகளுக்கும், மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கும்,LOLC மற்றும் பிரவுன்ஸ் முகாமைத்துவத்திற்கும், தலைவருக்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கும் நன்றி கூற விரும்புகின்றேன். ஆண்டு முழுவதும் ஒத்துழைப்புக்கும், அர்ப்பணிப்புக்கும் எமது மதிப்புமிக்க கமக்காரர்களுக்கும், கமக்காரா சமூகத் தலைவர்களுக்கும், அர்ப்பணிக்கப்பட்டதும், கடின உழைப்பாளிகளுக்குமான முகாமைத்துவப் பணியாளருக்கும், சகல ஊழியர்களுக்கும் மற்றும் வேலையாட்களுக்கும் எனது அன்பான நன்றியறிதல்களை விடுக்கின்றேன். அம்பாறை மாவட்டத்தின் அதி வணக்கத்துக்குரிய தேரர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் ஆகியோர் அவர்களது மதிப்பான ஆலோசனைக்கும், ஆதரவுக்கும் மரியாதையுடன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.**

**சுரத் பெரேரா**
**பிரதம செயற்பாட்டு அலுவலர்**
**கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை) லிமிற்.**
**24.07.2020**

# நிதிசார் சிறப்பம்சங்கள்

## கல்ஓய

### கம்பனியின் இரவல்வாங்கல்




### கம்பனியின் மொத்தச் சொத்துக்கள்



## ஆகுசெலவு மற்றும் செலவினங்கள்2018/19




## கம்பனியின் பங்குடமைகள்




## வருமானம் மற்றும் வேறு வருவாய்கள்






## லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனிPLC

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், எதிர்காலத்திற்கான ஒரு மிகவும் சிறந்த கண்ணுடனும், செம்மைப்படுத்தலுடனும் நேரங்களை அளவிடுவதற்கான வசதியுடனுமான கம்பனியொன்றாக ஆர்வமிக்க சந்தையொன்றுக்கான குத்தகையிலான தீர்வுகளுக்கு அப்போதைய இலங்கையின் முன்னோடியிலான செயலடைவுக்கோவைக்கு அதன் கதவுகளைத் திறந்துவைத்தது. இக் கம்பனி லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி (LOLC) ஆகும். குறுக்கிட்ட ஆண்டுகளின் போது, இந்த தைரியமானதும், இயக்காற்றலினதுமான அணுகுமுறையானது அன் வியாபாரத்தை குத்தகைக்கு விடும் துறைக்கு அப்பாலும், நிதிசார் சேவைகளின் துறையினுள் பெருமளவு வேறு துறைகளினுள்ளும் வளர்வதற்கு LOLCஐ இயலச்செய்துள்ளது. அப்போது இலங்கையின் முதன்மையான மொத்த நிதிசார் தீர்வுகள் வழங்குனர்களில் ஒன்றாக வருவதே எமது குறிக்கோளாகும். காரணிகளாகப் பிரித்தல், சேமிப்புகள், வைப்புக்கள்,SME துறைக்கு தைத்துவைத்தாற் போன்ற நிதிசார் உற்பத்திப்பொருட்கள், நுண்நிதி, இஸ்லாமிய நிதிப்படுத்தல்மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் போன்ற குத்தகைக்கு அப்பால் நிதிசார் சேவைகளை வழங்குவதில் நிபுணத்துவத்தை அடைந்த குரூப் கம்பனிகளை அது தாபித்ததினால் LOLC குரூப்பாக LOLC விரைவிலேயே வந்தது. அதன் பரவலாக்கப்பட்ட செயலமைப்புக்கோவையிலிருந்து ஒருங்கியல்தன்மைகளை நெம்புகோல்படுத்தி, தொகுதி முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வாகனம் தொடர்பான சேவைகள் போன்ற சேவைகளை வழங்குவதை LOLCஆரம்பித்தது.இலங்கையில் வளர்ச்சியினதும், முன்னேற்றத்தினதும்தோன்றுகின்ற துறைகளுடன் புதிய வியாபார முன்னேற்றத்தை நேர்படுத்துவதற்கு மூலோபாய தீர்மானமொன்றை LOLC எடுத்ததுடன், இது அதன் நடைமுறையிலான செயலடைவுக் கோவையை வளர்ப்பதை தொடருகின்ற அதேவேளை கமத்தொழில், பொழுதுபோக்கு, நிருமாணம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி போனற துறைகளினுள் குரூப் நகர்வதைக் கண்டுள்ளது.இன்று, இலங்கையின் உண்மையான நிலைத்திருக்கத்தக்க வியாபார குழுமங்களில் ஒன்றாக LOLC விளங்குகின்றது. எனினும் எது மாற்றமடையவில்லை அல்லது அற்றுப்போகவில்லை என்றால், சகலருக்கு வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்காக இடக்காற்றலினதும், செயற்படும்தன்மையினதும், பெருவிருப்பத்தினதும் அத்துடன் புதுமையான தகுதியினதும் தரங்கள் ஆகியனவாகும். சகல வியாபாரங்கள் முழுவதிலுமான LOLCஇன் உள்மைய விநியோகங்களில் ஒன்றாக விளங்குவது அதிகாரமளிக்கப்பாகும். வளர்ச்சியுறும் வியாபார முயற்சியாளர்களிலிருந்து உயர்நிலை கூட்டாண்மைகளாக, எமது வியாபாரமானது எப்பொழுதுமே வாழ்க்கையையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துகின்றதும், முன்னேற்றுவதுமான உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவது பற்றியதாகும்; கனவுகள் மெய்ப்படுவதை செய்வது பற்றியதாகும். அத்துடன் நீண்ட தக்கவைக்கப்பட்ட விருப்பார்வங்களை நிறைவேற்றுவது பற்றியதாகும் அத்துடன், மக்களை அதிகாரமளிப்பது பற்றியதாகும்.




## பிரவுன் அன்ட் கம்பனிPLC

ஏழு முக்கிய கைத்தொழில் துறைகளில் தொழிற்பாடுகளுடன் பரவலாக்கப்பட்ட பல்-நிறுவனமொன்றே பிரவுண் அன்ட் கம்பனி PLC (BCL) ஆகும். எங்குமுள்ள இலங்கையர்களுக்கு உற்பத்திப் பொருட்களிலும், சேவைகளிலும் தரத்தை வழங்குவதற்காக வியாபாரத்தில் 135க்கு மேற்பட்ட ஆண்டுகளிலிருந்து பெறப்பட்ட இலங்கையரின் பாவனையாளர் தேவைகளில் அவர்களது ஆழமான புரிந்துணர்வை BCL பயன்படுத்துகின்றது.

பெயரிடுவதற்கு ஒரு சில என்றவாறு ஒஸ்ரியன் எயார்லைன்ஸ்,BG, கொன்ரினென்ரல் எயார் லைன்ஸ், எக்லிப்ஸ், எக்சைட் பற்றரீஸ், இன்டர்வெற், ஓஸ், ஒலிம்பஸ், சார்ப், இயுக்கனுபா, ரே.ஃப், சக்ரோ, யன்மர் மரைன் என்ஜின்ஸ், அசோக் லேலன்ட் மரைன், பிற்னி பௌஸ், ஸ்கன்டினேவியன் எயார் லைன்ஸ், மகிற்றா, மக்ரெக், எப்.ஜி. வில்சன், யமாஷா, டேய்லிம் றோயல் பொயிலர் கோ,MFG, சிபாங், மற்றும் மஸ்ஸி போர்குசன் ஆகியன உட்பட பெருமளவு முன்னணிவாய்ந்த உலகளாவிய வணிகக் குறிகளில் குரூப்பணியாற்றுகின்றது. தீவகம் பூராவும் தாம் குடித்தன பெயர் என்பதை BCL ஏற்கனவே அறிந்துள்ளது.

நாம் சேவையாற்றும் ஒவ்வொருவருக்கும் உற்பத்திப் பொருட்களிலும் சேவைகளிலும் மற்றும் பெறுமதியிலும் இலகுவாகவும், அடக்கமாகவும் எமது செயலடைவுக் கோவையை அதிகளவில் விஸ்தரிப்பதன் மூலமும், திறமையை வழங்குவதன் மூலமும் நாம் இன்றுள்ள தீவிரமானதும், நவீனமானதும் அத்துடன் பெறுமதிமிக்கதுமான கம்பனியாக அமைதியாக இருந்தும் அடுக்குக் குறிக்கோளுடன் BCL வளர்ச்சி அடைந்துள்ளது.



**கீர்த்தி பீ. கொட்டகம - தலைவர்**

B.Sc (கமத்தொழில்) விசேட, MBA (நிதி&தொழில்நுட்ப முகாமைத்துவம்) AIT. கீர்த்தி பண்டார கொட்டகம கமத்தொழில் மற்றும் வியாபார முகாமைத்துவ துறைகளில் வாழ்க்கைத்துறை நிறைவேற்றுனராவார். இலங்கை, பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து கமத்தொழிலில் தனது பீ.எஸ்சியை (ஹொன்ஸ்) பெற்றுக்கொண்டதுடன், தாய்லாந்து - ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமாணியை (நிதி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம்) பெற்றார். பெருமளவு உள்நாட்டு மற்றும் சா்வதேசத் தாபனங்களினால் அவரது வாழ்க்கைத்தொழில் சேவைகளுக்கும் மற்றும் பங்களிப்புக்கும் கொட்டகம விருது அளிக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்டுமுள்ளார்.

**டி.எம்.எல்.பண்டாரநாயக்க - பணிப்பாளர்**

MSc (வியாபார முகமைத்துவம்) அவுஸ்திரேலியா விக்ரோரியா பல்கலைக்கழகம், M.A. (சிங்கள மொழி), களனி பல்கலைக்கழகம், B.A. (பேராதனைப் பல்கலைக்கழகம்,), அரசாங்க முகாமைத்துவத்தில் டிப்ளோமா, SLIDA.2018 முதல் அம்பாறை மாவட்டச் செயலாளராக திரு.டி.எம்.எல். பண்டாரநாயக்க விளங்கினார். அவர் ஊவா மாகாண சபை பிரதி பிரதம செயலாளராகவும், பெருந்தோட்ட அமைச்சுக்கான மேலதிக செயலாளராகவும் தென்னை அபிவிருத்தி, ஜனதா அரசாங்க அபிவிருத்தி அமைச்சுக்கு மேலதிகச் செயலாளராகவும், எல்ல பிரிவு செயலகத்தின் பிரிவு செயலாளராகவும் ஊவா மாகாணத்தின் MDTIஇன் பணிப்பாளராகவும், ஊவா மாகாணத்தின் மாகாண காணி ஆணையாளராகவும், அப்புத்தளை பிரிவு செயலகத்தின் உதவி பிரிவு செயலாளராகவும், நீர்ப்பாசன அமைச்சுக்கான உதவி செயலாளராகவும், கல்வி அமைச்சின் உதவி பணிப்பாளராகவும் மற்றும் ஆசிரியராகவும் விளங்கினார்.





**எஸ். கிரிதரன் - பணிப்பாளர்**

அரசாங்கத் துறையில் முன்னணி வாழ்க்கைத்தொழில்புரிபவராக திரு.சீனிவாசன் கிரிதரன் விளங்குகின்றார். அவர் நிதி அமைச்சின் செயலகத்தின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் விளங்கினார். இலங்கை நிருவாகச் சேவைகளில் 24 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை அவர் ஈட்டியுள்ளார். மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரியின் தயாரிப்பொன்றான திரு.எஸ்.கிரிதரன் ஸ்ரீ ஜயவர்தனபுர பட்டத்திற்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து அரசாங்க நிருவாகத்தில் முதுமானியைக் கொண்டிருப்பதுடன், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து பீ.எஸ்சி பட்டத்தையும் கொண்டுள்ளார். மட்டக்களப்பு மரபுரிமையின் ரோட்டரி கழகத்தின் பட்டய தலைவர் போன்று சமூக நடவடிக்கைகளிலும் திரு.சீனிவாசன் இணைந்துள்ளார்.

**பீ.எம்.டி.பண்டார பஸ்நாயக்க - பணிப்பாளர்**

லண்டன் மெற்றோபொலிற்றன் பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகத்தில் திரு. பஸ்நாயக்க பட்டதாரி ஒருவராக விளங்குவதுடன், ஜயவர்தனபுர பல்கலைக்கழக PIMஇலிருந்து வியாபார நிருவாகத்தின் நிறைவேற்று முதுமானியொன்றையும் கொண்டுள்ளார். அத்துடன் ஐக்கிய அமெரிக்க ஹொனலுலு பல்கலைக்கழகத்திலிருந்து MBA ஒன்றையும் கொண்டுள்ளார். அவர் அசோஸியேட்டட் நியூஸ்பேப்பா்ஸ் ஒ஺ப் சிலோன் லிமிற்றெற்றின் நிதிப் பணிப்பாளராக விளங்குவதுடன், பெருமளவு தனியார் கம்பனிகளில் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் சேவையாற்றினார். விசேடமாக அச்சு ஊடகங்கள், தொலைதொடர்பு, மருந்தாக்கம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் பாரிய வியாபாரமுயற்சிகளை நிருவகிப்பதில் முழுமையான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.





**திரு.என்.எஸ்.வணசிங்க - பணிப்பாளர்**

MA (பொருளியல்)களனி பல்கலைக்கழகம், B.Com (விசேட) ஹொன்ஸ் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.2015 முதல் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் பணிப்பாளராக (திட்டமிடல்) திரு வணசிங்க விளங்குகின்றார். அவர் தெங்கு அபிவிருத்தி, ஜனதா தோட்ட அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளராகவும் (திட்டமிடல்), கொழும்பு மாவட்ட செயலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் (திட்டமிடல்), மாத்தறை மாவட்ட செயலகத்தின் உதவிப் பணிப்பாளராகவும் (திட்டமிடல்), ரஜரட்ட நவோதய கருத்திட்டத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் அத்துடன் 2002 முதல் வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் (ADB) உதவிப் பணிப்பாளராகவும் விளங்கினார்.

# சபை (31 மார்ச் 2019இல் உள்ளவாறு)

## கல்ஓய



### கே.எ.கே.பி குணவர்தன - பணிப்பாளர்

சட்டத்தரணி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமா (PIM, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

பிரதம செயற்பாட்டு அலுவலர் - LOLC, பிரதம சட்ட அலுவலர் - LOLC Group 2004இல் LOLCஉடன் இணைந்து கொண்டதுடன், வழக்கறிஞர் ஒருவராக முப்பதுக்கு மேற்பட்ட வருடங்களைக் கொண்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். சட்ட மா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரசாங்க வழக்கறிஞர் அலுவலகம், இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்ட, வினைப்படுத்தல் பணிப்பாளர் அலுவலகம் அத்துடன் இலங்கைக் காப்புறுதிச் சபை ஆகியன உட்பட அரசாங்கத்தில் ஒரு தொகையிலான முக்கிய பதவிநிலைகளை ஏற்றிருந்தார் என்பதுடன், அதன் முதலாவது பணிப்பாளர் நாயகமாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அமைப்பதில் சம்பந்தப்பட்டிருந்தார். LOLC குரூப்பின் ஒரு தொகையிலான உள்நாட்டு மற்றும் கடல்கடந்த துணை நிறுவனங்களின் சபைகளிலும் அவர் சேவையாற்றினார்.



### டபிள்யு.கே.டி.ரி. அபேரத்ன - நிறைவேற்றுப் பணிப்பாளர்

விஞ்ஞான இளமாணி (எந்திரவியல்) (ஹொன்ஸ்), முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர், சந்தைப்படுத்தல் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர் (UK), பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர்களின் இணை உறுப்பினர் (USA), எந்திரவியலாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (SL).

திரு. அபேரத்ன தற்போது கல் ஓய பிளான்டேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற்றின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் மற்றும் கல் ஓய ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற்றின் பணிப்பாளராகவும் விளங்குகின்றார். பிறவுண் அன்ட் கம்பனி PLCஇன் குரூப் பிரதம தொழிற்படுத்தல் அலுவலராகவும் விளங்குகின்றார். பல்-தேசிய நிறுவனங்கள் உட்பட பெருமளவு முன்னணி நிறுவனங்களில் நிருவாகரீதியிலான மட்டத்தில் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை அவர் கொண்டிருப்பதுடன், சில வேறு குரூப் கம்பனிகளில் பணிப்பாளராகவும் விளங்கினார். பல்-தேசிய நிறுவனங்களில் பணியாற்றிய போது வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கும் அவர் பணியாற்றினார்.



### ஆர்.எம்.ஜி.கே.பீ.ரத்நாயக்க - பணிப்பாளர்/பி.நி.அ.

விஞ்ஞான இளமாணி (Agri-SL), விஞ்ஞான முதுமாணி (MAKS- நெதர்லாந்து), தாய்வானிலும், பிலிப்பைன்ஸிலும் நடைபெற்ற காணி சீர்திருத்தத்திலும், கிராம அபிவிருத்தியிலும் டிப்ளோமா அத்துடன் இந்தியா, அசாம் குவாஹட்டியில் நடைபெற்ற வரட்சிக்கு ஊறுபடும் பகுதிகள் மீதான விசேட நோக்கொன்றுடன் நீர்ப்பிடி நில செயற்றிட்டம்

ரத்நாயக்க தற்போது கல் ஓய பிளான்டேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற் மற்றும் கல் ஓய ஹோல்டிங்ஸ் (பிறை) லிமிற்றெற் ஆகியவற்றின் தற்போதைய பணிப்பாளராக/பிரதம நிறைவேற்று அலுவலராக விளங்குகின்றார். அவர் கமநல ஆராய்ச்சித் துறையில் பதினேழு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளராகவும், குறைநிரப்பு பெருந்தோட்ட பயிர்கள் அபிவிருத்தி அமைச்சுக்கான பணிப்பாளராகவும் (கருத்திட்டங்கள்) அத்துடன் பனை அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளராகவும் முன்னர் பணியாற்றினார்.



### வசந்த டி. பத்தகொட - பணிப்பாளர்

LL.B (ஹொன்ஸ்) ,( கொழும்பு ) LL.M (கொழும்பு). சட்டத்தரணி

வசந்த பத்தகொட ஒரு சட்டத்தரணி என்பதுடன், சட்டத் தொழிலில் 16 வருடங்களைக் கொண்ட தீவிரமான செயற்பாட்டைக் கொண்டுள்ளார். 2003இல் வழக்கறிஞராக அவர் அனுமதிக்கப்பட்டதுடன், மூலத்திலான நீதிமன்றங்களிலும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் சட்டத் தொழிலில் இருந்தார். கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திலிருந்து LLB இல் இரண்டாவது வகுப்பு ஹொனர்ஸ்சை ஈட்டியதுடன், கொழும்பு சட்ட பீடத்திலிருந்து புலமை ஆதன சட்டத்தில் சட்டத்தில் முதுமானியைப் பெற்றார். 2014 வரை சிரேஷ்ட ஜனாதிபதி வழக்கறிஞருடன் பெருமளவு உயர் புறவரையிலான குற்றவியல் வழக்குகளில் அவர் ஆஜரானார். 2014இல் LOLC குரூப்பில் உதவிப் பொது முகாமையாளராக அவர் இணைந்து கொண்டதுடன், தற்போது பிரதி பொது முகாமையாளராக (சட்டம் மற்றும் உபாய வியாபாரம்) பணியாற்றுகின்றார். பிறவுண் அன்ட் கம்பனி PLC மற்றும் மதுரட்ட பிளான்டேஷன்ஸ் லிமிற்றெற் ஆகியவற்றின் சட்டத் தலைவராகவும் அவர் பணியாற்றுகின்றார். அத்துடன் சிலோன் கிரபைன் லிமிற்றெற்றில் பணிப்பாளராகவும் விளங்குகின்றார்.



### ஜன்செனி குகனேசன்- கம்பனி செயலாளர்

LOLC கோப்பரேற்றற் சேர்விஷஸ் (பிறைவேற்) லிமிற்றெற்றை ஜன்செனி குகனேசன் பிரதிநிதிப்படுத்துவதுடன், கம்பனிக்கு செயலாளர் சேவைகளையும் வழங்குகின்றார். செல்வி குகனேசன் பட்டய செயலாளர்கள், நிருவாகிகள் நிறுவனத்தின் (UK) இணை உறுப்பினர் ஒருவராக விளங்குகின்றார். LOLC குழுமத்தில் இணைவதற்கு முன்னர் அவர்RIL Property PLCஇன் கம்பனி செயலாளராகவும் மற்றும் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினதும் மற்றும் இலங்கை உல்லாசப்பயணச் சபையினதும் சபை செயலாளராகவும் செயற்பட்டார்.

# சிரேஷ்ட



**சுரத் பெரேரா**
பிரதம செயற்பாட்டு அலுவலர்



**எ.எச்.டபிள்யு.மதுஷான்**
தலைவர் - ம.வ மற்றும் நிருவாகம்



**எஸ்.எம்.எஸ்.பி.குமார**
பிரதம முகாமையாளர் - தொழிற்சாலை



**ரி.ஐ.விஜேசிங்க**
வேலைத்தல முகாமையாளர்



**கே.ரி.எஸ்.குமார**
வெளிவளர்ப்பு முகாமையாளர்

# முகாமைத்துவம்

## கல்ஓய



**பீ.மயில்ராஜ்கார்த்திகேயன்**
பி.பொ.மு. - வடிசாலை



**எம்.எ.சி.முனசிங்க**
நிதித் தலைவர்



**எச்.சி.குணரத்ன**
சிரேஷ்ட கணக்காளர்



**டபிள்யு.எ.என்.சதுரங்க**
முகாமையாளர் - பராமரிப்பு



**எச்.எம்.எ.பண்டார**
பெருந்தோட்ட முகாமையாளர்

# கம்பனியின் கட்டமைப்பு

## கல்ஓய



# பயிர்ச்செய்கை

## கல்ஓய

### முடிவடைந்த ஆண்டுக்கு விளைச்சல்கள் 31மார்ச் 2019

**175,056** மொ.தொ.
பெருந்தோட்டத்திலிருந்து கரும்பு

**3,380** ஹெக்.
பயிரிடல் முடிவடைந்துள்ளது

2018/19 பருவத்திற்கு அறுவடை

**52** மொ.தொ./ஹெக்.
சராசரி விளைச்சல்

**10,282** மொ.தொ.
கமப்பொருளியலிலிருந்து கரும்பு

**4,625** ஹெக்.
நடைமுறையில் உள்ள கரும்புக் காணிப் பகுதி

### முடிவடைந்த ஆண்டுக்கு இலக்குகள் 31மார்ச் 2020

**290,432** மொ.தொ.
பெருந்தோட்டத்திலிருந்து கரும்பு

மொத்த அறுவடையில் அதிகரிப்பு

**13,655** மொ.தொ.
கமப்பொருளியலிலிருந்து கரும்பு

**3,500** ஹெக்.
புதிய மற்றும் மீள்-நடுகை



4,400 குடும்பங்கள் மத்தியில் ஒதுக்கப்பட்ட அண்ணளவாக 5,200 ஹெக். கொண்ட பாசனத்திலான காணியுடன் ஹிங்குரான சுகர் இன்டஸ்ரீஸுக்கு 7,659 ஹெக்டார் (ஹெக்.) கொண்ட காணியை பெருந்தோட்டம் உடமையாக்கியுள்ளது. வரிப்பத்தான்சேனை, கல்மடுவ, தீகவாபி, ஹிங்குரான மற்றும் நீத்த என 5 பாரிய வலயங்களினுள் கருத்திட்டப் பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. நீர் திட்டமொன்றுடன் 166 ஹெக். கொண்ட காணியைக் கொண்ட விஸ்தீரணமொன்றுடனான அடிப்படைத் தோட்டமொன்று கரும்பின் செய்கை பண்ணக்கூடிய காணியைக் கொண்ட 5,200 ஹெக்டாருக்கு ஆதரவளிக்கும்.

| அமைவிடம் | விஸ்தீரணம் (ஹெக்) | ஒதுக்கீடு பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வாரிபத்தன்சேன | 1,067 | 947 |
| கல்மடுவ | 1,233 | 926 |
| தீகவாபிய | 1,034 | 870 |
| ஹிங்குரான | 764 | 697 |
| நீத்த | 1,104 | 1,001 |
| மொத்தம் | 5,202 | 4,441 |

## கரும்பு நாற்றுமேடை

விதை கரும்பினை தயாரித்தல் பூச்சி மற்றும் நோய் ஆகியவற்றினை கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல், விவசாய பணியாளருக்கும் மற்றும் விவசாயிகளுக்கும் விரிவாக்கற் செயற்றிட்டங்கள் நடத்துதல் அத்துடன்,சீனி ஆராய்ச்சி நிறுவனத்துடனான கூட்டுமுயற்சியில் சீனி கரும்கு விவசாயத்தின் பலதரப்பட்ட அம்சங்களின் மீது ஆராய்ச்சியை நடத்துதல் ஆகியனவே GOPLஇன் கமப்பொருளியல் பிரிவின் பணியாகும். எதிர்கால பயிரிடுதல் திரவியத்தினதும், சோதனைத் திட்டங்களினதும் மூலமொன்றாக 20க்கு மேற்பட்ட சீனி ஆராய்ச்சி நிறுவன கரும்பு முளைவகைகளை பிரிவு பேணுகின்றது. நாற்றுமேடைப் பகுதி 201 ஹெக்டாரைக் கொண்டுள்ளதுடன், இதில் ஆரம்பநிலை விதைகளின் பராமரிப்புக்கு 72 ஹெக்டாரும், இரண்டாம்நிலை நாற்றுமேடைக்கு 120 ஹெக்டாரும் உள்ளது. நாற்றுமேடைக்கு மேலதிகமாக, மொத்த கரும்பு தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக விதைகளை ஒப்பந்த விதைக் கரும்பு கமக்காரர்கள் வழங்குகின்றார்கள்.

## சாதனை

நிதிசார் ஆண்டின் இறுதியில், வரிப்பத்தான்சேனை, கல்மடுவ, ஹிங்குரான, நீத்த, தீகவாப்பிய ஆகிய 5 பாரிய வலயங்களிலும் மற்றும் அம்பாறை மற்றும் சியம்பலாந்துவ ஆகியவற்றில் வெளிவளர்ப்புப் பகுதிகளிலும் 5,999 ஹெக். கொண்ட செய்கைபண்ணப்பட்ட கரும்புக் காணிகளை நாம் கொண்டுள்ளோம்.




## சிறு உடைமையாளர் கம-வியாபார பங்காண்மை செய்திட்டம் (SAPP)

கரும்பு விளைச்சலுடன் ஒன்றுசேர இடை-செய்கையை விஸ்தரிப்பதன் மூலம் அம்பாறை மாவட்டத்தில் செய்கைப் பகுதியையும் அத்துடன் ஒதுக்கங்களை பெற்றவர்களின் வருமானத்தையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் சிறு உடைமையாளர் கம-வியாபார பங்காண்மை செய்திட்டத்துடன் (SAPP)கல்ஓய பிளான்டேஷன்ஸ் லிமிற்றெற் பங்காளித்துவத்தைக் கொண்டிருந்தது. ஹெக்டாருக்கு கரும்பு விளைச்சலை அதிகரிப்பதும்,கமக்காரர் வருமானத்தை அதிகரிப்பதும் நோக்கங்களாகும். விஸ்தரிப்பு ஆதரவு, தொழிற்படு மூலதனத்திற்காக கடனுக்கான அடைதல், பயிர் காப்புறுதி மற்றும் கமக்காரர்களுக்கு உபகரணங்களின் உதவுதொகை ஆகியனவற்றை பங்காண்மையின் முக்கிய அம்சங்கள் உள்ளடக்கியிருந்தன. இச் செயல் திட்டத்தில், பங்காண்மையினுள் 4,000 பயனாளிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 6.5% கொண்ட வருடாந்த வட்டி வீதத்தில் குறைந்த ஆகுசெலவு கடன் நிதிப்படுத்தலுடன் ஆகக்கூடுதலாக ரூபா 230,000 பெற்றுக்கொண்டதுடன், இந்த தகுதிவாய்ந்த கமக்காரர்களுக்கு ரூபா 34,500.00 கொண்ட பெறுமதியிலான இடை செய்கையாளர் இயந்திரமொன்றின் உதவு தொகையும் கிடைத்தது.

## பெருந்தோட்டத்தின் முன்னேற்றம்

2018/19 பருவ காலத்தின் போது எமது கரும்பு செய்கை பண்ணப்பட்ட வயல்களிலிருந்தும், கமப்பொருள் வயல்களிலிருந்தும் 152,916 மெ.தொ. கொண்ட வர்த்தக கரும்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது. வர்த்தக கரும்புக்கு மேலதிகமாக இக் காலத்தின் போது 32,422.140 மெ.தொ. கொண்ட விதைக் கரும்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது. தோட்ட பிரிவின் கீழுள்ள பகுதி 150,709.580 மெ.தொ. கொண்ட வர்த்தகக் கரும்பை அறுவடை செய்ததுடன், பெருந்தோட்ட பிரிவின் கீழுள்ள பகுதியிலிருந்து 24,346.510 மெ.தொ. கொண்ட விதைக் கரும்பு அறுவடை செய்யப்பட்டதுடன், விளைச்சல் ஹெக்டாருக்கு 52 மெ.தொ/ஹெக். ஆகும்.

## 2018/19ஆண்டுக்கு புதிய பயிரிடல்

| புதிய பயிரிடல் பகுதிகள் | விஸ்தீரணம் (ஹெக்.) |
|---|---|
| **கமப்பொருளியல்** | 114 |
| **பெருந்தோட்டம்** | 2,397 |
| **வெளியில் வளர்ப்போர் - அம்பாறை** | 422 |
| **வெளியில் வளர்ப்போர் - சியாம்பலாந்துவ** | 447 |
| **மொத்தம்** | **3,380** |

## நடைமுறையிலான கரும்புப் பகுதி

| பயிரின் வகை | விஸ்தீரணம் (ஹெக்.) |
|---|---|
| **தாவரப் பயிர்** | 3,034 |
| **வேரங்குரம்-1** | 1,016 |
| **வேரங்குரம்-2** | 378 |
| **வேரங்குரம்-3** | 91 |
| **வேரங்குரம்-4** | 35 |
| **வேரங்குரம்-5** | 43 |
| **வேரங்குரம்-6** | 24 |
| **வேரங்குரம்-7** | 3 |
| **வேரங்குரம்-8** | 0 |
| **வேரங்குரம்-9** | 1 |
| **மொத்தம்** | **4,625** |





Harvesting at Galmaduwa Zone



# சீனி உற்பத்தி

கல்ஓய

## 31 மார்ச் 2019இல் முடிவடைந்த ஆண்டுக்கு விளைவுகள்

**152,017** மெ.தொ.
மொத்தமாக பிழியப்பட்ட கரும்பு

**9,565** மெ.தொ.
சீனி உற்பத்தி

**8,076** மெ.தொ.
மொலாசஸ் உற்பத்தி

**6.74 %**
சீனி அறவிடல் (மீட்டெடுப்பு)

## 31 மார்ச் 2019இல் முடிவடைந்த ஆண்டுக்கு இலக்குகள

**262,384** மெ.தொ.
கரும்பு பிழிதல்

**20,993** மெ.தொ.
சீனி உற்பத்தி

**13,119** மெ.தொ.
மொலாசஸ் உற்பத்தி

**8 %**
சீனி அறவிடல் (மீட்டெடுப்பு)



கல்ஓய பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஹிங்குரான சீனித் தொழிற்சாலை முதன்முதலில் 1960களில் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. செக்கோஸ்லோவாக்கிய அரசாங்கத்தால் பரிசளிக்கப்பட்ட இந்த தொழிற்சாலை “ஆசியாவின் இராட்சசன்” என்று அன்புடன் அழைக்கப்பட்டதுடன், அந்த நேரத்தில் இப்பகுதியில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி கட்டப்பட்ட மிகப்பெரிய சீனித் தொழிற்சாலைகளில் ஒன்றாகும். ஐக்கிய ராஜ்யத்தில் “மிர்லீஸ் வாட்சன்” என்ற நிறுவனத்தால் தொழிற்சாலை இயந்திரங்கள் வழங்கப்பட்டன. தொழிற்சாலையின் மதிப்பிடப்பட்ட திறன் ஒரு நாளைக்கு 2,000 தொன்கள் (TCD) ஆகும். வெற்றிட தட்டு சீனி பதப்படுத்தும் முறைமையொன்றுடன் 3 உருளை ஐந்து பொறித்தொகுதி முன் பின்புறங்களைத் தொழிற்சாலை கொண்டுள்ளது. படிக பழுப்பு சர்க்கரையை தொழிற்சாலை உற்பத்தி செய்வதுடன், வெளித்தள்ளல் செயல்முறையையும் பின்பற்றுகிறது.

1960 முதல் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலை வளாகம் தொழிற்சங்க அமைதியின்மை மற்றும் தவறான நிர்வாகம் ஆகியவற்றின் காரணமாக 1997இல் மூடப்பட்டது. கல்ஓய பிளான்டேஷன்ஸ்(பிறை) லிமிற். 2009இல் தொழிற்சாலைக்கு புத்துயிர் அளிக்க ஆரம்பித்ததுடன், 2012இல் முதலாவது நொருக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தொழிற்சாலை பிரிவால் பின்வரும் செயல்பாடுகள் கையாளப்பட்டன:

- கரும்புகளின் தரத்தைச் சரிபார்த்தல்
- கரும்பு தயாரித்தல் மற்றும் அரைத்தல்
- வணிக சீனியை உற்பத்தி செய்தல்
- சீனியின் தர அளவுருக்களைச் சரிபார்த்தல்
- நீராவி மற்றும் மின் உற்பத்தி
- நீர் சுத்திகரிப்பு
- மின்சார மற்றும் கருவிமயமாக்கல் பணிகள்
- புனைதல், பழுதுபார்த்தல் மற்றும் வார்ப்பகப் பணிகள்
- சிவில் கட்டுமானம் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள்







**தரக் கட்டுப்பாட்டு அலகு:**
அறுவடை செய்யப்பட்ட கரும்பின் கழிவின் அடிப்படையையும் மற்றும் கிடைக்கும் சீனியின் சதவீதத்தையும் அளந்து கரும்பின் தரத்தை தீர்மானித்தல்.

**ஆலைப் பிரிவு:**
கரும்பு தயாரிக்கும் பணி 02 எண்ணிக்கையிலான வெட்டிகளைப் பயன்படுத்தியும், அரைக்கும் பணி மூன்று உருளைஐந்து பொறித்தொகுதி முன் பின்புறம் மூலமும் செய்யப்படுகிறது. நீராவி விசையாழிகள் பொறித்தொகுதிக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கின்றன.

**உற்பத்திப் பிரிவு:**
பாகுவை உற்பத்தி செய்வதற்கு கரும்பு சாறு தெளிவுபடுத்துதல் மற்றும் ஆவியாதல் செயல்முறை மூலம் செல்கின்றது. இந்த பாகுவைப் பயன்படுத்தி சீனி படிகங்கள் உருவாகுவதுடன், பின்னர் பிரித்தல் செய்யப்படுகிறது. இறுதியாக இந்த சீனி உலர்த்தப்பட்டு¤ இறுதியாக 50 கிலோ சீனி பைகளை உற்பத்தி செய்கிறது.

**ஆய்வுகூடம்:**
சீனி உற்பத்தி செயல்முறையின் ஒவ்வொரு நிலையிலும் தர அளவுருக்களை அளவிடுதல்.

**கொதிகலன் பிரிவு:**
02 எண்கள், 35 TPH திறன் கொண்ட கொதிகலன்கள் முழு தொழிற்சாலைக்கும் 2MW மின் விசையாழியையும் மற்றும் 05 எண்ணிக்கையிலான பொறித்தொகுதி விசையாழிகளையும் இயக்க தேவையான ஆற்றலை (நீராவி) உற்பத்தி செய்கின்றன.

**தொழிற்சாலைப் பட்டறை:**
புனையமைப்பு மற்றும் எந்திர வேலைகளை அவசியப்படுத்தல். வார்ப்பகப் பணிகளைச் செய்தல்.

**மின் பிரிவு:**
மின்சாரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் மின்சார விநியோகம் மற்றும் பராமரிப்பு,AC சேவை மற்றும் பழுதுபார்த்தல் போன்ற முழு கம்பனியிலும் அனைத்து மின் மற்றும் கருவியாக்கல் வேலைகளைக் கவனிக்கின்றது.

**சிவில் பிரிவு:**
அனைத்து சிவில் நிருமாணம் மற்றும் பராமரிப்பு, தச்சு மற்றும் கட்டுமான வேலைகள்

**நீர் சுத்திகரிப்பு நிலையம்:**
ஜனவரி 2012 முதல் அனைத்து கம்பனி வளாகங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதன் மூலம் நீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் இறைத்தல் நிலையப் பணிகள் முடிவடைந்து அதன் செயல்பாட்டைத் தொடங்கியுள்ளன. இந்தப் பொறி 250,000LPH திறன் கொண்டது.



## சாதனைகள்

கொதிகலன் புகைபோக்கிகளில் இருந்து பறத்தல் சாம்பல் சுற்றியுள்ள பகுதிகளுக்கு பரவுவது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. இந்தச் சிக்கலைச் சரிசெய்வதற்காக பறத்தல் சாம்பலைத் தணிக்கும் முறைமையொன்று நிறுவப்பட்டு, அது 2018/19 நிதியாண்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது.

## தொழிற்சாலையின்பலம்

2,000TCD திறன் கொண்ட தொழிற்சாலையானது நியமவரம்புகளுடன் உயர்தர பழுப்புச் சீனியை உற்பத்தி செய்கிறது.

நொருக்கும் திறன் - ஐந்து ஆலை முன் பின்னுடன் 2,000 TCD.

சீனி உற்பத்தி – 160 மெ.தொ./நாள்

கொதிகலன் திறன் - 35 TPH, 02 எண்கள்

மின் உற்பத்தி - 2 MW

## தொழிற்சாலை நடவடிக்கைகள்

சீனி உற்பத்திக்கான கைத்தொழில்செயல்முறையானது கரும்புச் சாற்றை சீனி படிகங்களாக மாற்றுவதற்கு அசுத்தங்களை அகற்றுவதன் மூலம் பல செயல்முறைகளைப் பயன்படுத்துகிறது.

உற்பத்தி செயல்முறை பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

- அரைத்தல்
- தெளிவுபடுத்துதல்
- ஆவியாதல்
- படிகமாக்கல்
- பிரித்தல்
- உலர்த்துதல்
- பொதிப்படுத்தல்





# வடிசாலை

## கல்ஓய

31 மார்ச் 2019இல்
முடிவடைந்த ஆண்டுக்கு **விளைவுகள்**

**4,284,325**லீ.
ENA உற்பத்தி

**15,388**மெ.தொ.
மொலாசஸ் உற்பத்தி

**205**
தொழிற்படும் நாட்களின் எண்.



31 மார்ச் 2020இல்
முடிவடைந்த ஆண்டுக்கு **இலக்கு**

**5,000,000** லீ.
ENAஉற்பத்தி

**250**
தொழிற்படும் நாட்களின் எண்.

**18,184** மெ.தொ.
மொலாசஸ் உற்பத்தி

வடிசாலை வளாக கட்டமைப்பு பூஜ்ஜிய திரவ வெளியேற்ற முறைமையை(ZLD)நோக்கி உள்ளது.கழிவு முதல் செல்வம் வரையிலான நவீன பொறிமுறையைக் கொண்ட இலங்கையில் உள்ள ஒரே பொறித்தொகுதி இதுவேயாகும் என்பதுடன், மேலும் சுற்றுச்சூழல் உரிமம் மற்றும் பாராட்டுகளைப் பெற்ற ஒரே பொறித்தொகுதி கல் ஓய என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.ENA, $CO_2$,உயிரக வாயு, உயிரக கலவைப் பசளை, திரவப் பசளை மற்றும் கழிவு நீரோடைகளில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் ஆகியவற்றின் உற்பத்தியின் அதிநவீன நிலையிலான தொழில்நுட்பத்தை இந்த வளாகம் வடிவமைத்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒன்றுக்கு ENAஇன் தரம் இணையாக உள்ளது. ஏறக்குறைய அனைத்து மதுபான உற்பத்தியாளர்களும் உயர்ந்த தரமான மதுபானங்களைத் தயாரிப்பதற்கு எங்கள் ENAஐ விரும்புகின்றனர்.

ENA உற்பத்தி 21,500 லீட்டர் மதுசாரம்/நாள், 10,000 $M^3$ உயிரக வாயு/நாள், 5,000 மெ.தொ./ஆண்டு உயிரக கூட்டுப்பசளை, அத்துடன் 400 KL/நாள் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி.

## செயல்முறை விவரணம்

நொதித்தல் மற்றும் வடித்தெடுத்தல் போன்ற மிக உயர் தரமான ENAதயாரிப்பில் இரண்டு முக்கிய செயல்முறைகள் சம்பந்தப்பட்டுள்ளன.

## நொதித்தல்

நொதித்தல் என்பது உயிரியல் செயல்முறையாகும், இதில் வெல்லப்பாகு கழுவலானதுமதுசாரமாக மாற்றப்படுகிறது. நொதித்தல் செயல்முறையானது வீட்டில் உள்ள நொதியவளர்ப்பின் (Saccharomyces cerevisiae) உதவியுடன் உயர்ந்தளவு நிறுவப்பட்ட நொதிப்பான் மேற்கொள்ளப்படுகிறது. நொதித்தல் செயல்பாட்டில் 4 நொதிப்பான்கள் மற்றும் 3 வளர்ப்பு கொள்கலன்கள் ஆகியன சம்பந்தப்பட்டுள்ளன.

## வடித்தெடுத்தல்

வடித்தெடுத்தல் மிகவும் நவீன சுற்றுச்சூழல் நுண் MPR வடித்தெடுத்தல் (பல்-அமுக்கவடித்தெடுத்தல்) ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், இது வழக்கமான முறைகளைக் காட்டிலும் மிகவும் முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது, குறைந்தபட்ச ஆற்றல் தேவையுடன் ENAஇன் சிறந்த தரத்தைப் பெற ஏழு பத்திவடித்தெடுத்தல்கள் அனுசரிக்கப்படுகின்றன.



*படம்: ஆய்வுகூடத்தில் தர உறுதிப்பாடு*




Distillery Plant Complex

# உயிரக கூட்டுப்பசளை செயலாக்க அலகு

கல்ஓய



### உயிரககூட்டுப்பசளைசெயன்முறை அலகு

ஆண்டுக்கு 5,000 தொன் உற்பத்தி திறனை இலங்கையின் மிகப்பெரிய பொறித்தொகுதியான உயிரககூட்டுப்பசளை செயன்முறை அலகு கொண்ட வடிசாலை வளாகம் கொண்டுள்ளது.முழு உயிரககூட்டுப்பசளை செயன்முறையானதுசீனி பொறித்தொகுதி மற்றும் வடிசாலையில் இருந்து கழிவுகளைக் கையாளவும், அதிக ஊட்டச்சத்து கொண்ட உயிரக கூட்டுப்பசளையாக செல்வத்தை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டுத் தேவைக்காக இறக்குமதி செய்யப்படும் அசேதன உரத்திற்குப் பதிலாக உயிரக கூட்டுப்பசளைஒரு விருப்புக்குரியதாக இருக்கலாம்.

### செயல்முறை விளக்கம்

உயிரக கூட்டுப்பசளையாக்கம் என்பது உயிரியல் செயல்முறையாகும், லிக்னோ-செல்லுலோஸ் பொருளை ஒரு எளிய கலவையாக சிதைப்பது,உயிரக கூட்டுப்பசளை எனப்படும் மக்கியது போன்ற இறுதி தயாரிப்பு ஆகும். இது சேதனப் பசளையின் வளமான ஆதாரமாகும். இது மண் வளத்தையும் மற்றும் பயிர் வளர்ச்சியையும் கணிசமாக மேம்படுத்த உதவுகிறது.

செயன்முறையானதுகாற்றுவாழ்வுக் குரியது என்பதுடன், இது எளிய துணிக்கைகளாகசெல்லுலோஸ் மற்றும் லிக்னின் போன்ற உயர் சேதன சேர்மங்களை உடைப்பதற்கு பாக்டீரியா, ஆக்டினோமைசீட்ஸ் மற்றும் பூஞ்சை போன்ற பல்வேறு சுதேசிய தெர்மோபிலிக் நுண்-அங்கிகளைச் சம்பந்தப்படுத்துகிறது.



கூட்டுப்பசளையாக்கத்தின் போது,ஒட்சிசனை நுண் அங்கிகள் நுகர்கின்ற அதே வேளை,சேதனப் பொருட்களை உட்கொண்டு பெருகின்றன. தீவிரமான கூட்டுப்பசளையாக்கம் கணிசமான அளவு வெப்பத்தை உருவாக்குகிறது. காபன்-டை-ஒக்சைட்டினதும் மற்றும் நீராவியினதும் இழப்பானதுஆரம்ப உலர்சேதனப் பொருட்களின் எடையைக் குறைத்து, சேதன கூட்டுப்பசளையை உற்பத்தி செய்கின்றது.

கூட்டுப்பசளையாக்க செயன்முறை பின்வரும் கட்டங்களினுள் பிரிக்கப்பட்டுள்ளது:

1) காற்றுவரிசைகளின் உருவாக்கம்.
2) நோய்தடுப்புப் பிரயோகம்
3) காற்றோட்டம்.
4) சமைந்த கழுவு தெளித்தல் மற்றும் பண்படுத்தல்.
5) சல்லடையாக்கல் மற்றும் நீளுறை
6) சந்தைப்படுத்தல்

**உயிரக கூட்டுப்பசளையின் அபூர்வமான நன்மைகள்**

- மண்ணின் பௌதீக,இரசாயன மற்றும் உயிரியல் பண்புகளை மேம்படுத்துகிறது.
- மண்ணின் அமைப்பு, காற்றுச் சுழற்சி மற்றும் மண்ணின் நீர் தக்கவைக்கும் திறன் ஆகியனவற்றை மேம்படுத்துகிறது.
- ஊட்டச் சத்துக்களைத் தக்கவைத்து, அவை தாவர வேர்களை விட்டு வெளியேறுவதைத் தடுக்கிறது.
- தாவர வளர்ச்சிக்கு தேவையான நுண்ணூட்டச்சத்துக்கள் (கல்சியம், சல்பர்,மக்னீசியம், இரும்பு போன்றவை) மற்றும் பெயரந்த-ஊட்டச்சத்துக்கள் (நைதரசன்,பொஸ்பரஸ் மற்றும் பொட்டாஷ்) ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.
- நுண்ணுயிரிகள் மண்ணில் உள்ள பயிர் எச்சங்களின் முறிவை துரிதப்படுத்துகின்றன. இது மண்ணின் அமைப்பை மேம்படுத்துவதோடு, கட்டுப்படுத்தப்பட்ட மூலக்கூறுகளையும் வெளியிடுகின்றது.
- வயல், மரக்கறி, மரம் மற்றும் பழப் பயிர்கள் ஆகியவற்றின் விளைச்சலையும் மற்றும் தரத்தையும் அதிகரிக்கின்றது.
- தள-பண்படுத்தல்,உச்சி-பண்படுத்தல் என இரண்டிலும் எளிதாகப் பிரயோகிக்கலாம்.
- கார மற்றும் உவர்/சோடிக் மண்ணை மேம்படுத்துகிறது.
- மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் வேர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- அனைத்து வகையான வயல் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், பழத்தோட்டங்கள், சமையலறை தோட்டங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# ஊழியர்கள்

## கல்ஓய




### மனித வளங்களின் மதிப்பாய்வு

உலகமயமாக்கல் உலகின் இன்றியமையாத மூலதனம் மனித இனமேயாகும். இது சவால்களையும் அத்துடன் புதிய கூட்டுமுயற்சிக்கும் மற்றும் புதிய நுண்ணறிவுக்குமான வாய்ப்புக்களையும் கொண்டு வருகிறது. மனித வளப் பிரிவு முன்னோக்கிச் செல்லுகையில், அது நல்ல வணிக விளைவுகள் மீது நோக்கினைக் கொண்டு அதை அவ்வாறு செய்யும். பணியாளர்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கும், குழாம் அணுகுமுறையைப் பயன்படுத்துவதற்கும், பிரிவுகளுடன் வணிக பங்காண்மை உறவுகளை உருவாக்குவதற்கும் மற்றும் கிட்டுகின்ற வரையறுக்கப்பட்ட மனித வள ஆதாரங்களை மேலும் பயன்படுத்துவதற்கும் மனித வளங்கள் உற்சாகமாக உள்ளன.

### மனித வளங்கள் மற்றும் நிருவாகப் பிரிவின் செயற்பாடுகள்

கல்ஓய பிளான்டேஷன்ஸ் (பிறை.) லிமிற்றெற்றின் மனித வளங்கள் பிரிவு அதன் முதுகெலும்பு என்பதுடன் தாபனத்தின் தொழிற்பாட்டிலான மையமாகச் சேவையாற்று கின்றது. இது தாபனத்தின் ஒவ்வொரு அம்சத்துடன் மிகநெருக்கமாகச் சம்பந்தப் பட்டிருப்பதால் காட்சிகளின் முன்னணியிலும், பின்னணியிலும் தொழிற்பாடுகின்றது.

முக்கியமான மனித வளத் துறைகளின் வகையொன்றில் வேலைப்படை குடித்தொகை யியல்களுக்கும் மற்றும் போக்குகளுக்கும் தொடர்பான செயல்நிறைவேற்ற நடவடிக்கை களையும், தகவலையும் ஒன்றுதிரட்டும் மனித வளங்கள் சம்பந்தப்பட்ட அடிமட்ட தரவுகளுக்கு சாத்தியப்படும் போதெல்லாம் ஒப்பீடுகளைச் செய்கின்றது.

மனித வளங்கள் பிரிவொன்றாக நாம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேறுபட்ட செயற்பாடு களை கையாள்வதன் ஊடாக எமது கம்பனியின் மிகவும் பெறுமதிமிக்க வளங்களை நிருவகிப்பதன் ஊடாக வியாபாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எமது சேவையை நாம் வழங்குகின்றோம்.

- மனித வளத் திட்டமிடல்
- ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு
- ஊழியர் உறவுகள்
- ஊதிய முகாமைத்துவம்
- பதவியுயர்வு மற்றும் வெகுமதிகள்
- பயிற்சி மற்றும் முன்னேற்றம்
- ஊழியர் சேமநலன்
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
- இணங்குதல்
- பொது நிருவாகம்
- சட்டவாக்கம்
- கொள்வனவு
- தகவல் தொழில்நுட்பம்

## எமது தொழில்

2018/19 நிதிசார் ஆண்டின் இறுதியில் கீழே உள்ள வகுதிகளாக எமது கம்பனியில் 936 ஊழியர்கள் இருந்தனர். மேலதிகமாக, நொறுக்குதல் காலத்தின் போது 77 பருவகால ஒப்பந்த ஊழியர்கள் பணியாற்றினர்.

| | நிரந்தரம் | ஒப்பந்தம் |
|---|---|---|
| நிறைவேற்றுப் பணியாளர் | 51 | 18 |
| நிறைவேற்று-சாராத பணியாளர் | 259 | 608 |

நிறைவேற்று வகுதியில் பொது முகாமையாளரிலிருந்து கனிஷ்ட நிறைவேற்று முகாமைத்துவ தரங்கள் வரையும் அத்துடன் ஒப்பந்த மற்றும் நிறைவேற்று சாராத வகுதியில் SP 1 முதல் S 5 வரையிலான பணியாட் தரங்கள் உள்ளன. தொழிலாளர் வகுதி SP1 முதல் P5 வரையிலான தரங்களைக் கொண்டுள்ளதுடன், அவர்கள் நிறைவேற்று-சாராத, ஒப்பந்த மற்றும் சமயாசமய அடிப்படையைப் பிரதிநிதிப்படுத்துகின்றனர்.



## ஊழியர் சேமநலன் சங்கம்

கம்பனியின் கூட்டு முயற்சியுடன் ஆரம்பத்திலிருந்து தொடருகின்ற GOPL சேமநலன் சங்கம் மிகவும் பெறுமதிமிக்க நன்மையை ஊழியர்களுக்கு வழங்குகின்றது. அவை பின்வருமாறு:

- மரண நன்கொடைகள்
- கடன் வசதி
- பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்
- திருமணப்படி
- சேமநலன் கடை ஊடாக சில்லறைப் பொருட்கள்
- உணவக வசதி
- விளையாட்டு
  - உதாரணம்: பிரிவுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி
- பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
  - உதாரணம்: வருடாந்த ஒன்றுகூடல்
  - உதாரணம்: புத்தாண்டுக் கொண்டாட்ட வைபவம்
  - உதாரணம்: ஆண்டுச் சுற்றுலா

## ஊழியர் பயிற்சி மற்றும் முன்னேற்றம்

ஊழியர் கற்கையின் பல்-எண்ணிக்கையிலான வகைகளை உள்ளடக்கும் பரந்த பதமொன்றே ஊழியர் பயிற்சியும், முன்னேற்றமும் ஆகும். தமது நடைமுறையிலான வகிபங்குகளில் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக குறிப்பான அறிவை அல்லது திறன்களைக் கற்பதற்கு ஊழியர்களுக்கு உதவுகின்ற திட்டமொன்றே பயிற்சியாகும். முன்னேற்றமானது அதிகளவு விரிவானது என்பதுடன், உடனடியிலான தொழில் வகிபங்கொன்றை விட ஊழியர் வளர்ச்சியினதும் மற்றும் எதிர்கால செயற்றிறனினதும் மீது நோக்கினையும் கொண்டுள்ளது.

நாம் மக்கள் செலுத்தலிலான கம்பனி ஒன்று என்பதனால் கடந்த வருடத்தினுள் எமது ஊழியர்களின் செயற்றிறனை மிக உயர்ந்த மட்டத்திற்கு வைத்திருப்பதற்கு அதிகளவு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நாம் நடத்தியுள்ளோம். அவற்றின் மத்தியில் ஒரு சில திட்டங்கள் வருமாறு:



## பயிற்சி மற்றும் முன்னேற்றங்கள்

மனித வள தகவல் முறைமையை (HRIS) பயன்படுத்தும் அலுவலர்களுக்கு நாங்கள் ஒரு உள்ளக பயிற்சித் திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

அனைத்து நிர்வாக ஊழியர்களுக்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், செயல்நோக்கமளிப்பதற்குமான பயிற்சித் திட்டத்தை அம்பாறை மொன்டி ஹொட்டேலில், 7 ஜூலை 2018 அன்று, நாங்கள் நடத்தியுள்ளோம்.



லெஸ் இஸ் மோர் குரூப் ஒழுங்குசெய்திருந்த சினமன் லேக் சைட் ஹொட்டலில் சிகிச்சை வாழ்க்கை முறை மாற்றம் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் மூன்று நிறைவேற்று அலுவலர்கள் கலந்து கொண்டனர். வடிசாலை அலுவலர்களுக்கு 11 ஜூலை 2018 அன்று நிறுவனத்தின் சபை அறையில் NALCO மூலம் நீர் பரிகரிப்பு மீது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.



அரசாங்க தாளாண்மைகள் திணைக்களம் மற்றும் CSBM ஆகியவற்றால் ஒழுங்குசெய்யப்பட்ட 2019 ஜனவரி 29 அன்று கொழும்பு வியாபார முகாமை பாடசாலையின் பிரதான கேட்போர்கூடத்தில் மனித வள மன்ற சிறப்பம்சங்கள் மீதான பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பட்டய ஆளணியினர் முகாமைத்துவ நிறுவனத்தினால் (CIPM) ஒழுங்குசெய்யப்பட்ட 2019 மார்ச் 26 அன்று கண்டி நிலையத்தின் பிரதான கேட்போர்கூடத்தில் பணியாளர்களின் தவறான நடத்தை மீது மனித வள முகாமையாளரின் பங்கு மீதான பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்றார்.



## CSR மற்றும் நன்கொடைகள்

- ஹிங்குரான மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிக்காக ஒரு வெற்றிக்கிண்ணம் நன்கொடையாக வழங்கப்பட்டது.
உள்நாட்டுச் சந்தையிலிருந்து நிலைத்திருக்கின்ற கரும்பின் சந்தை விலை பெறுப்படுவதுடன், கம்பனியின் நிலைத்திருக்கின்ற கரும்பின் அண்ணளவுக்கு நிறை கருதப்படுகின்றது.

**ஈ) மதிப்புக்குறைவு**
மதிப்புக் குறைவினை மதிப்பிடுவதில், எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பணப்புழக்கம் மீதான அடிப்படையில் ஒவ்வொரு சொத்தின் அறவிடக்கூடிய தொகையை அல்லது பணம் தோற்றுவிக்கும் அலகை முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது என்பதுடன்,அவற்றைக் கழிப்பதற்காக பொருத்தமான வட்டி வீதமொன்றையும் பயன்படுத்துகின்றது. எதிர்காலத் தொழிற்பாட்டிலான முடிவுகளை எதிர்வுகூறுவதில் அவற்றின் தீர்ப்பனவு மீதான அடிப்படையில் சில அனுமானங்களை முகாமைத்துவம் செய்கின்றது.

**2.5. நடந்துகொண்டிருக்கும கரிசனை**
நடந்துகொண்டிருக்கும் கரிசனையொன்றாகத் தொடர்வதற்கான கம்பனியின் தகுதியின் மதிப்பீடொன்றைப் பணிப்பாளர்கள் செய்துள்ளதுடன், காணக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தில் தொடர்வதற்கான வளங்களை அது கொண்டுள்ளதையிட்டு திருப்தி கொண்டுள்ளது. எனவே, இந்த நிதிசார் கூற்றுக்கள் நடந்துகொண்டிருக்கும் கரிசனை அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

**3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்**
கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியின் நிதிசார் கூற்றில் முன்வைக்கப்பட்டுள்ள சகல காலங்களுக்கும் இணக்கத்தக்கதாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்**
வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் கொடுக்கல்வாங்கல்களின் திகதிகளில் வெளிநாட்டுச் செலாவணி வீதங்களில் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வகுக்கப்பட்டுள்ள சகல நாணயச் சொத்துக்களும், பொறுப்புக்களும் அத் திகதியில் நிலவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்களுக்கு மீள் மாற்றப்படுகின்றன. வெளிநாட்டுச் செலாவணி ஆதாயம் அல்லது நாணய விடயங்கள் மீதான நஷ்டம் காலத்தின் ஆரம்பத்தில் தொழிற்பாட்டிலான நாணயத்தில் பெறுமானம் பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவுகளுக்கும், அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் பரிமாற்ற வீதத்தில் மாற்றப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெறுமானம் பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுரீதியிலான ஆகுசெலவு மீதான அடிப்படையில் அளவிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயம்சாராத சொத்துக்களும், பொறுப்புக்களும் கொடுக்கல் வாங்கல்களின் திகதியில் வெளிநாட்டு வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் வெளிநாட்டு நாணங்களில் குறிப்பிடப்படும நாணயம்சாராத சொத்துக்களும், பொறுப்புக்களும் நியாயமான பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிலவிய வெளிநாட்டு வீதத்தில் அறிக்கையிடும் நாணயத்திற்கு மீள்-மாற்றப்படுகின்றன.

விற்பனை ஒப்புரவு மூலதனங்களுக்கு கிட்டுகின்ற மீள் -மாற்றம் மீது எழுகின்ற வித்தியாசங்கள் புறநீங்கலாக, இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் மீள் மாற்றம் மீது எழுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வித்தியாசங்கள் அங்கீகரிக்கப்படுவதுடன், வெளிநாட்டுத் தொழிற்பாடுகளில் நிகர முதலீட்டின் நஷ்ட இன்மை ஒன்றாக குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதிசார் பொறுப்பு அல்லது வேறு விரிவான வருமானத்தில் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள தகுதிபெறும் பணப் புழக்க நஷ்ட இன்மைகளாக விளங்கும். வெளிநாட்டு நாணய ஆதாயங்களும், நஷ்டங்களும் இலாப அல்லது நட்ட கூற்றில் நிகர அடிப்படையொன்றின் மீது அறிக்கையிடப்படுகின்றன.

**3.2. சொத்துக்கள் மற்றும் அவற்றன் பெறுமதியின் அடிப்படைகள்**

**3.2.1. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**3.2.1.1. அங்கீகாரம் மற்றும் அளவீடு**

கழிக்கப்பட்ட திரண்ட மதிப்பிறக்க ஆகுசெலவிலும், திரண்ட பெறுமானக்குறைவு நஷ்டங்களிலும் ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் விடயங்கள் அளவிடப்படுகின்றன. ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் விடயமொன்றின் ஆகுசெலவானது அதன் கொள்வனவு விலையையும், அதன் உத்தேசமான உபயோகத்திற்கு தொழிற்பாட்டிலான நிலைமைக்கு சொத்துக்களைக் கொண்டு வருவதற்கான ஏதேனும் நேரடியாக சாட்டக்கூடிய ஆகுசெலவையும் கொண்டுள்ளது. பொருட்களினதும், நேரடியான சரீரஉழைப்பினதும் ஆகுசெலவையும், அதன் உத்தேசமான உபயோகத்திற்கு தொழிற்பாட்டு நிலைமைக்கு சொத்துக்களைக் கொண்டு வருவதற்கு நேரடியாகச் சாட்டக்கூடிய ஏதேனும் வேறு ஆகுசெலவுகளையும் அங்கீகார மூலப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டால் இரவல்பெறும் ஆகுசெலவுகளையும் சுய நிருமாணத்திலான சொத்துக்களின் ஆகுசெலவு உள்ளடக்குகின்றது. விடயங்களைக் கழற்றிப் பிரிப்பதும், அகற்றுவதும் அத்துடன் அவை அமைந்துள்ள அமைவிடத்தில் அவற்றை மீள-வைப்பதுமான ஆகுசெலவை இது உள்ளடக்குகின்றது.

ஆரம்பத்தில் ஆதனத்தினதும், பொறியினதும் மற்றம் உபகரணத்தினதும் சகல விடயங்களும் ஆகுசெலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**3.2.1.2. தொடர்ந்து வருகின்ற ஆகுசெலவு**

விடயத்தில் சூழவுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு பாயும் என்பதுடன் விடயத்தின் ஆகுசெலவு நம்பகமாக அளவிடப்படவும் முடியும் என்பது சாத்தியமானதாகும் போது, விடயமொன்றின் பாகமொன்றை பதிலீடு செய்யும் ஆகுசெலவிலான ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் காவுகின்ற தொகையை கம்பனி அங்கீகரிக்கின்றது. பதிலீடு செய்யப்படுகின்ற பாகங்களின் காவும் தொகைகள் சொத்துக்களின் ஆகுசெலவிலிருந்து அடையாளம் காணப்படுகின்றன. ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் நாளாந்த சேவைப்படுத்தலின் ஆகுசெலவு அவை ஏற்படுகின்ற போதெல்லாம் இலாப அல்லது நஷ்ட கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது.

**3.2.1.3. அங்கீகாரம் மீளப்பெறப்படுதல்**

ஆதனத்தின், பொறியின் மற்றும் உபகரணத்தின் அத்துடன் ஏதேனும் குறிப்பிடத்தக்க பாகத்தின் விடயமொன்று அங்கீகரிக்கப்பட்டால் அது விற்றொழித்தல் மீது அல்லது அதன் உபயோகத்திலிருந்து அல்லது விற்றொழித்தலிலிருந்து எதிர்கால நன்மைகள் எதிர்பார்க்கப்படாத போது அங்கீகாரம் மீளப்பெறப்படுகின்றது. சொத்தின் அங்கீகாரம் மீளப்பெறப்படுதல் மீது எழுகின்ற ஏதேனும் ஆதாயம் அல்லது நஷ்டம் (நிகர விற்றொழித்தல் வரும்படிகளுக்கும், சொத்தின் காவுகின்ற தொகைக்கும் இடையிலான வித்தியாமாகக் கணக்கிடப்பட்ட) சொத்தானது அங்கீகாரம் மீளப்பெறப்படுகின்ற போது விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக்களின் மீதமான பெறுமதிகள், பயனுள்ள ஆயுள்கள் மற்றும் மதிப்பிறக்கத்தின் முறைகள் ஆகியன ஒவ்வொரு நிதிசார் ஆண்டிலும் மதிப்பாயப்படுவதுடன், பொருத்தமென்றால் தீர்மானமெடுப்போர்களுக்கு நிதிசார் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள தகவலின் சம்பந்தத்தையும். நம்பகத்தன்மையையும் அதிகரிப்பதற்கு நிதிசார் கூற்றுக்களுக்கு எதிர்பார்த்தவாறு சீராக்கப்படுகின்றன.

**3.2.1.4. மதிப்பிறக்கம்**

அதன் மீதமான பெறுமதி கழிக்கப்பட்டு சொத்தொன்றின் ஆகுசெலவு மீது மதிப்பிறக்கம் அடிப்படையைக் கொண்டுள்ளது. ஆதனத்தினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் ஒவ்வொரு பாகத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்களின் மேலாக ஒரு நேர்க்கோட்டு அடிப்படையின் மீது இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் மதிப்பிறக்கம் அங்கீகரிக்கப்படுகின்றது. பயன்படுவதற்கான அது கிட்டுகின்ற போது சொத்தொன்றின் மதிப்பிறக்கம் ஆரம்பமாவதுடன், சொத்துக்கள் விற்றொழிப்பதற்கான திகதியின் முன்னர் இடைநின்றுவிடுகின்றது. குத்தகைத் தவணையின் இறுதிக்குள் சொத்துரிமையை நிறுவனம் பெறும் என்பதையிட்டு நியாயமானதன்மையில் உறுதியானதல்ல என்றால் அன்றி, அவற்றின் குத்தகைத் தவணையின் மற்றும் அவற்றின் பயனுள்ள ஆயுளின் குறுகியதன்மைக்கு மேலாக குத்தகையிலான சொத்துக்கள் மதிப்பிறக்கப்படுகின்றன. தனிப்பட்ட சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் மதிப்பிடப்படுவதுடன், அந்தச் சொத்தின் மீதத்திலிருந்து வேறுபடுகின்றதாக பயனுள்ள ஆயுள் ஒன்றை அம்சமொன்று கொண்டிருந்தால், அந்த அம்சம் புறம்பாக மதிப்பிறக்கப்படுகின்றது.

**கல் ஒய பிளான்டேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற் றெற்**
**நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

நடைமுறையிலானதும், ஒப்பீட்டிலானதுமான ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்கள் வருமாறு:

| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | **ஆண்டுகளின் வீச்செல்லை எண்.** |
|---|---|
| கட்டிடங்கள் | 10 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திராதிகள் - தொழிற்சாலை | 12 ஆண்டுகள் |
| தொகுதி இயந்திராதிகள் | 4 ஆண்டுகள் |
| நீர் தூய்மைப்படுத்தும் பொறி | 12 ஆண்டுகள் |
| மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 4 ஆண்டுகள் |
| கமத்தொழில் உபகரணங்கள் மற்றும் | 8 ஆண்டுகள் |
| விடுதி உபகரணங்கள | 8 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணங்கள் | 8 ஆண்டுகள் |
| ட்ரக்டர்கள் மற்றும் ட்ரெயிலர்கள் | 6 ஆண்டுகள் |
| கரும்பு அறுவடை உபகரணங்கள் | 4 ஆண்டுகள் |
| மோட்டார் சைக்கிள்கள் | 4 ஆண்டுகள் |
| கணனி உபகரணங்கள் | 4 ஆண்டுகள் |
| நடமாடும் தொலைபேசிகள் | 4 ஆண்டுகள் |
| GPS தேடல் கருவிகள் | 4 ஆண்டுகள் |
| உருப்படியற்ற சொத்து | 4 ஆண்டுகள் |
| வடிசாலை பொறி மற்றும் இயந்திராதிகள் | 20 ஆண்டுகள் |

### 3.2.1.5. பெறுமானப் பதிவழிப்பு

குறுகிய குத்தகைக் காலத்தினதும், சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளினதும் மீது பின்வருமாறு சமமான தொகைகளில் இறையிலி உரிமைகள் பெறுமானப் பதிவழிக்கப்படுகின்றன.

| **சொத்தின் வகுப்பு** | **ஆண்டுகளின் எண்.** |
|---|---|
| காணி | 30 ஆண்டுகள் |
| நிரந்தரமான காணி முன்னேற்றம் | 30 ஆண்டுகள் |

### 3.2.1.6. உருப்படியற்ற சொத்துக்கள்

கம்பனிக்கு சொத்துக்கு சாட்டப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் சாத்தியமானதும் என்னும் போதும், சொத்தின் ஆகுசெலவு நம்பகமாக அளவிடப்பட முடியும் என்னும் போதும் ஆரம்பத்தில் ஆகுசெலவில் உருப்படியற்ற சொத்தொன்று அங்கீகரிக்கப்படுகின்றது. திரண்ட பெறுமானப் பதிவழிப்பும், மதிப்பு குறைந்த நஷ்டங்களும் கழிக்கப்பட்டு, ஆகுசெலவில் ஐந்தொகையில் இந்த உருப்படியற்ற சொத்துக்கள் காவப்படுகின்றன.

தொடர்பான வன்கணியத்தின் உள்மையப் பாகமொன்றாக அமையாததும், தெளிவாக அடையாளங்காணக்கூடியதும், நம்பகமாக அளவிடக்கூடியதும் அத்துடன், எதிர்காலப் பொருளாதார நன்மைகளுக்கு அவை இட்டுச் செல்லும் என்பது சாத்தியமானதுமான கம்பனியினால் பயன்படுத்துவதற்கு ஏற்படுகின்றதும், உத்தரவுப்பத்திரத்திற்குமான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஆகுசெலவு கழிக்கப்பட்ட திரண்டு பெறுமானபதிவழிப்பிலும், ஏதேனும் திரண்ட மதிப்புக்குறைந்த நஷ்டங்களிலும் காவப்படுகின்றன.

### 3.2.2. உயிரியல் சொத்துக்கள்

நாற்றுமேடை மற்றும் நிலைத்திருக்கும் கரும்பு ஆகியவற்றை உயிரியல் சொத்துக்கள் கொண்டுள்ளன.

வேறுபாடுகளைப் பிரதிபலிப்பதற்காக, பொருத்தமானவிடத்து சீராக்கல்களுடன் உள்நாட்டுச் சந்தையில் கிட்டுகின்ற சந்தை நடைமுறை மீதான அடிப்படையில் விற்பதற்கான ஆகுசெலவு கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியில் நிலைத்திருக்கும் கரும்பு அளவிடப்படுகின்றது. நிலைத்திருக்கும் கரும்பின் விற்பனைக்கான ஆகுசெலவு அறுவடையினதும், ஏற்றுதலினதும் மற்றும் போக்குவரத்தினதும் ஏற்றத்திலான ஆகுசெலவை உள்ளடக்குகின்றது.

விரிவான வருமானத்தின் கூற்றில் நிலைத்திருக்கும் கரும்பின் நியாயமான பெறுமதியில் மாற்றம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆரம்ப ஆகுசெலவு ஏற்படுதல் இடம்பெற்றுள்ளதால் சிறிதளவு உயிரியல் உருமாற்றமொன்றாக ஆகுசெலவில் நாற்றுமேடைகள் மதிக்கப்பட்டுள்ளதுடன், விலை மீதான உயிரியல் உருமாற்றத்தின் தாக்கம் கருதப்படும் என எதிர்பார்க்கப்படவில்லை. நேரடியானதும், மறைமுகமானதுமான நடுகை ஆகுசெலவை ஆகுசெலவு உள்ளடக்குகின்றது.

**அ) பயிர் நாற்றுமேடைகளை வளர்த்தல்**
நேரடிப் பொருட்களின் ஆகுசெலவு, நேரடியான சரீரஉழைப்பு, மற்றும் நேரடியாகச் சாட்டப்படக்கூடிய மேலதிகச்செலவினங்களின் பொருத்தமான சதவீதப்பாடு ஆகியவற்றை நாற்றுமேடை ஆகுசெலவு உள்ளடக்குகின்றது.

### 3.2.3. இரவல்பெறல் ஆகுசெலவு

அதன் உத்தேசமான உபயோகத்திற்கு அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு நேர காலமொன்றை எடுக்கின்ற தகுதிபெறுகின்ற சொத்தொன்றின் கையகப்படுத்தலுக்கு, நிருமாணத்திற்கு அல்லது உற்பத்திக்கு நேரடியாகச் சாட்டப்படக்கூடிய இரவல்பெறல் ஆகுசெலவுகள் சொத்தின் பாகமொன்றாக மூலதனமிடப்படுகின்றன.

மூலதனமிடப்படாத இரவல்பெறல் ஆகுசெலவுகள் அவை ஏற்படுகின்ற காலத்தில் செலவினங்களாக அங்கீகரிக்கப்படுவதுடன், விரிவான வருமானத்தின் கூற்றுக்கும் சுமத்தப்படுகின்றன.

மூலதனமிடுவதற்கு தகுதியான இரவல்பெறல் ஆகுசெலவுகளின் தொகைகள் LKAS 23 - 'இரவல் பெறல் ஆகுசெலவுகள்' என்பதன் பிரகாரம் நிர்ணயிக்கப்படுகின்றன.

வெளிக்கள அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற குறிப்பான கடன்கள் தொடர்பில் ஏற்படுகின்ற இரவல்பெறல் ஆகுசெலவுகள் சம்பந்தப்பட்ட முதிராத பெருந்தோட்டத்தின் ஆகுசெலவின் பாகமொன்றாக மூலதனமிடப்பட்டுள்ளன. வர்த்தக அறுவடைக்கு பயிர்கள் தயாராகும் போது மூலதனமிடல் இடைநிறுத்தப்படும். அவ்வாறாக மூலதனமிடப்பட்ட தொகையும், மூலதனமிடப்படும் வீதங்களும் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தகுதிபெறும் சொத்தொன்றின் கையகப்படுத்தலுக்கு, நிருமாணத்திற்கு அல்லது உற்பத்திக்கு நேரடியாக சாட்டப்படாத இரவல்பெறல் ஆகுசெலவுகள் பயனுறுதிவாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி இலாப அல்லது நஷ்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.2.4. நிரந்தரமான காணி அபிவிருத்தி ஆகுசெலவுகள்

இறையிலி காணிகள் மீது குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும், புதிய அடைதல் வீதிகளைக் கட்டுவதிலும் ஏற்படுகின்ற ஆகுசெலவுகளே நிரந்தரமான காணி அபிவிருத்தி ஆகுசெலவுகளாகும்.

இந்த ஆகுசெலவுகள் மீதமுள்ள குத்தகைக் காலத்தின் போது மூலதனமிடப்பட்டு, பெறுமானப் பதிவழிக்கப்பட்டுள்ளன.

### 3.2.5. முன்னேற்றத்தில் உள்ள மொத்த வேலை

முன்னேற்றத்தில் உள்ள மொத்த வேலையின் ஆகுசெலவானது அதன் மீதான ஏதேனும் தொடர்பான செலவினங்களுடன் ஒன்றுசேர கொள்வனவின் அல்லது நிருமாணத்தின் ஆகுசெலவாகும்.

நிரந்தரமான தன்மைக்கான முன்னேற்றத்தில் உள்ள மொத்த வேலை மீது ஏற்படுகின்ற அல்லது வியாபாரத்தின் சம்பாதிக்கும் ஆற்றலளவை அதிகரிக்கும் நோக்கத்திற்கான செலவினம் மொத்தச் செலவினமாக கருதப்பட்டுள்ளது.

முதலாவது உபயோகத்தின் நேரத்தில் அல்லது சொத்து பாரப்படுத்தப்படும் நேரத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்குகளுக்கு முன்னேற்றத்தில் உள்ள மொத்த வேலை இடமாற்றப்படுகின்றது.

### 3.2.6. குத்தகைகள்

**அ) நிதிக் குத்தகைகள்**
உரித்துரிமையின் சகல ஆபத்தையும், நடுத்தீர்வைகளையும் கணிசமானளவு கம்பனி அனுமானிக்கும் குத்தகைகள் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரம் மீது ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் கீழான குத்தகையிலான சொத்துக்கள் அதன் நியாயமான பெறுமதியின் குறைவான சமமான தொகையொன்றிலும், குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலும் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, அந்தச் சொத்துக்களுக்கு பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கிடப்படுகின்றன.

நிதிக் குத்தகைகளின் கீழான குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிச் செலவினத்திற்கும், நிலுவையிலான பொறுப்பின் குறைப்புக்கும் இடையில் பங்கிடப்படுகின்றன. பொறுப்பின் எஞ்சியுள்ள மீதி மீதான தொடர்ச்சியான குறித்த காலத்திலான வீத வட்டியொன்றை முன்வைக்கும் வகையில் குத்தகைக் காலத்தின் போது ஒவ்வொரு பருவத்திற்கும் நிதிச் செலவினம் ஒதுக்கப்படுகின்றது.

**ஆ) தொழிற்பாட்டிலான குத்தகைகள்**

குத்தகையிலான காலத்தின் போது உரித்துரிமையின் சகல ஆபத்துக்களையும், நன்மைகளையும் குத்தகைக்கெடுப்பவர் கணிசமானளவு பயனுறுதிவாய்ந்ததாக தக்கவைத்திருக்கும் குத்தகைகள் தொழிற்பாட்டிலான குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. குத்தகையின் காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையொன்றின் அல்லது குத்தகையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளின் நேரப் பாங்கின் அதிகளவு பிரதிநிதித்துவத்திலான ஏதேனும் வேறு அடிப்படையின் மீது இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் உள்ள செலவினமொன்றாக தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழான கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

**3.2.7. மதிப்புக்குறைப்பு – நிதி சாராத சொத்துக்கள்**

பொருட்பட்டியல்கள் தவிர்ந்த கம்பனியின் நிதி-சாராத சொத்துக்களின் காவும் தொகையானது மதிப்புக் குறைவின் ஏதேனும் எடுத்துக்காட்டு உள்ளதா என்பதை நிர்ணயிப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடலிலும் மதிப்பாய்வுபடுகின்றது. அத்தகைய ஏதேனும் எடுத்துக்காட்டு நிலவினால் அத்தகைய சொத்துக்களின் அறவிடக்கூடிய தொகைகள் மதிப்பிடப்படுகின்றன.

சொத்தொன்றின் காவும் தொகை அல்லது அதன் பணம் தோற்றுவிக்கும் அலகு ஆகியன அதன் அறவிடக்கூடிய தொகையை மீறினால் மதிப்புக் குறைவிலான நஷ்டமொன்று அடையாளங் காணப்படுகின்றது. வேறு சொத்துக்களிலிருந்து பெரிதுமே சுதந்திரமானதாக விளங்கும் பணப் பாய்வைத் தோற்றுவிக்கும் மிகச் சிறிய அடையாளங் காணக்கூடிய சொத்துக் குழுவாகும். இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் பெறுமானக் குறைபாடு நஷ்டங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

**3.3. நிதிசார் சாதனங்கள்**

**3.3.1. நிதிசார் சொத்துக்கள்**

சாதனங்களின் ஒப்பந்தத்திலான ஏற்பாடுகளுக்கு தரப்பொன்றாக கம்பனி வரும்போது அதன் நிதிசார் நிலைமையின் கூற்றில் நிதிசார் சொத்துக்களை கம்பனி அங்கீகரிக்கின்றது. சொத்து காலாவதியாவதிலிருந்து பணப் பாய்விற்கான ஒப்பந்தத்திலான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதிசார் சொத்துக்களின் உரித்துரிமையின் கணிசமானளவு சகல ஆபத்தும், நடுத்தீர்வைகளும் கைமாற்றப்படுகையில் கொடுக்கல் வாங்கலொன்றில் நிதிசார் சொத்துக்கள் மீதான ஒப்பந்தத்திலான பணப்பாய்வுகளைப் பெறுவதற்கான உரிமையை அது கைமாற்றுகையில் நிதிசார் சொத்தொன்றை கம்பனி மீள் அங்கீகரிக்கின்றது. கம்பனியினால் உருவாக்கப்படும் அல்லது தக்கவைக்கப்படும் கைமாற்றப்பட்ட நிதிசார் சொத்துக்களில் ஏதேனும் அக்கறையானது புறம்பான சொத்துக்களாக அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதிசார் சொத்துக்களும், பொறுப்புக்களும் ஈடுசெய்யப்படுவதுடன், நிதிசார் நிலைமையின் கூற்றில் நிகர தொகை முன்வைக்கப்படும் போது, அத்துடன் போது மட்டும், நிகர அடிப்படையொன்றின் மீது இணக்குவதற்கு அல்லது சொத்துக்களை அடைவதற்கு அல்லது ஒரே சமயத்தில் பொறுப்பை இணக்குவதற்கு தொகைகளையும், நோக்கங்களையும் இணக்குவதற்கான சட்டபூர்வ உரிமையொன்றைக் கம்பனி கொண்டுள்ளது.

**அ) கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்**

சுறுசுறுப்பான சந்தையொன்றில் கூறுவிலையிடப்படாத நிலையான அல்லது நிர்ணயத்திலான கொடுப்பனவுகளுடனான நிதிசார் சொத்துக்களே கடன்களும், கிடைக்க வேண்டியவைகளுமாகும். ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி சக ஏதேனும் நேரடியாக சாட்டப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளில் அத்தகைய சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்பத்திலான அங்கீகாரத்திற்கான தொடர்ச்சியாக, கடன்களும், கிடைக்க வேண்டியவைகளும் ஏதேனும் பெறுமதிக் குறைப்பு நஷ்டங்கள் கழிக்கப்பட்டு பயனுறுதிவாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி பெறுமான பதிவழிப்பு ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன.

கம்பனியின் கடன்களும், கிடைக்க வேண்டியவைகளும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன.

**i) வர்த்தக கிடைக்க வேண்டியவைகள்**

தேறுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகைகளிலும், கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கிடைக்க வேண்டியவைகளுக்கான நிகர ஏற்பாடுகளிலும் மதிப்பிடப்பட்ட தொகைகளில் வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகள் குறிப்பிடப்படுகின்றன. கிடைக்க வேண்டியவைகளின் மூலத்திலான தவணைகளின் பிரகாரம் வருமதியிலான சகல தொகைகளையும் அறவிடுவதற்கு குரூப் இயலாதிருப்பதற்கான நோக்கத்திலான சான்று இருக்குமிடத்து சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாடொன்று செய்யப்படுகின்றது. கிடைக்காத கடன்கள் அடையாளங் காணப்படும் போது பெறுமதியழிக்கப்படுகின்றன.

**ஆ) பணம் மற்றும் பணச்சமப்படுத்தல்கள்**

தமது நியாயமான பெறுமதியில் மாற்றங்களின் குறிப்பிடப்படாத இடராபத்துக்கு உட்படுகின்ற மூன்று மாதங்களுக்கும் குறைவான மூலத்திலான முதிர்ச்சிகளுடன் குறுகிய-கால பணக் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக தக்கவைக்கப்பட்டுள்ள கையில் உள்ள பணத்தையும், வங்கிகளில் உள்ள பணத்தையும் மற்றும் வேறு உயர்வான திரவ நிதிசார் சொத்துக்களையும் பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் கொண்டுள்ளன.

கோரிக்கையின் மீது வங்கி மேலதிக வரைவுகள் மீள்கொடுப்பனவுக்குரியவை என்பதுடன், குரூப் பண முகாமைத்துவத்தின் உள்மைய அங்கமொன்றாக அமைவதுடன், பணப்பாய்வுகளின் கூற்றின் நோக்கத்திற்காக பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்களின் மூலக்கூறொன்றாக உள்ளடக்கப்படுகின்றன

**3.4. பொருட்பட்டியல்கள்**

குறைந்த ஆகுசெலவிலும், நிகர தேறக்கூடிய பெறுமதியிலும் பொருட்பட்டியல்கள் அளவிடப்படுகின்றன. தயாரிக்கப்பட்ட பொருட்பட்டியல்களினதும், முன்னேற்றத்திலான வேலையினதும் விடயத்தில் வழமையான தொழிற்பாட்டிலான ஆற்றலளவு மீதான அடிப்படையில் உற்பத்தி மேலதிகச் செலவினங்களின் பொருத்தமான பங்கொன்றை ஆகுசெலவு உள்ளடக்குகின்றது. முடித்துவைத்தலினதும், விற்பனையினதும் செலவினங்களின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவுகள் கழிக்கப்பட்டு, வியாபாரத்தில் சாதாரண மார்க்கத்தின் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே நிகர தேறக்கூடிய பெறுமதியாகும்.

அதன் தற்போதைய அமைவிடத்திற்கும், நிலைமைக்கும் பொருட்பட்டியல்களைக் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள ஆகுசெலவானது பின்வரும் ஆகுசெலவு சூத்திரத்தைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளது:

உள்ளீட்டுப் பொருள், உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைக்குரியவை – நிறுத்தப்பட்ட சராசரி அடிப்படை மீதான உண்மையான ஆகுசெலவில்

முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் முன்னேற்றத்திலான வேலை (சீனி) – நேரடியான பொருள் ஆகுசெலவில், நேரடியான சரீரத்தொழிலில் மற்றும் உற்பத்தி மேலதிகச் செலவினங்களின் பொருத்தமான விகிதாசாரம் மற்றும் உற்பத்தியினாலான குறைந்த விற்பனை விலை (மொலாசஸ்)

மொலாசஸ் - உப உற்பத்தி – சராசரி விற்பனை விலை

**3.5 நிதிசார் பொறுப்புக்கள்**

அவை தோன்றிய திகதி அன்று கடன் பிணையங்களையும், கடன்களையும் மற்றும் இரவல் பெறல்களையும் கம்பனி ஆரம்பத்தில் அங்கீகரிக்கின்றது. சகல ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் வர்த்தகத் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுவே ஒப்பந்தத்திலான கருவிகளின் ஏற்பாடுகளுக்கு தரப்பாக கம்பனி வருகின்ற திகதியாகும்.

அதன் ஒப்பந்தத்திலான கடப்பாடுகளை நிறைவேற்றப்படும் இரத்துச் செய்யப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார் பொறுப்பொன்றை கம்பனி அங்கீகாரத்தை மீளப்பெறுகின்றது.

வேறு நிதிசார் பொறுப்புக்கள் வகுதியினுள் வழிபிறழாத நிதிசார் பொறுப்புக்களை குரூப் வகைப்படுத்துகின்றது. அத்தகைய நிதிசார் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி சகல ஏதேனும் நேரடியாகச் சாட்டப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்பத்திலான அங்கீகாரத்தைத் தொடர்ந்து இந்த நிதிசார் பொறுப்புக்கள் பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையைப் பயன்படுத்தி பெறுமானப்பதிவழிப்பு ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன. கடன்கள், இரவல் பெறல்கள், வங்கி மேலதிகப் பற்று மற்றும் வழங்கப்பட்ட கடன்முறிகள் ஆகியவற்றை ஏனைய நிதிசார் வசதிகள் கொண்டுள்ளன.

**3.5.1 வேறு பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்**

**3.5.1.1 பொது**

நிதிசார் நிலைமையில் நடைமுறைப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் கிராக்கி மீதான அல்லது நிதிசார் நிலைமை திகதியின் கூற்றிலிருந்து ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுக்கு வருமதியாக வருகின்றவையாக உள்ளன.நிதிசார் நிலைமைத் திகதியின் கூற்றிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் கொடுப்பனவுக்கு வருமதியாக விளங்கும் மீதிகளே நடைமுறை-சாராத பொறுப்புக்களாகும். கடந்த கால நிகழ்வுகளின் விளைவொன்றாக சட்டபூர்வ அல்லது உருப்படியான கடப்பாடொன்றை கம்பனி/குரூப் கொண்டுள்ள போது ஏற்பாடுகளும், பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்படுவதுடன், பொருளாதார நன்மைகளின் செலவீடொன்று கடப்பாட்டினை இணக்குவதற்கு அவசியப்படும் என்பது நிகழ்தகவாகும்.

**3.5.2 ஊழியர் நன்மைகள்**

**3.5.2.1 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

ஊழியர் பிற்பட்ட நன்மைத் திட்டமொன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றாகும். இதன் கீழ், புறம்பான நிறுவனமொன்றினுள் நிறுவனமொன்று நிலையான பங்களிப்பினைக் கொடுப்பனவு செய்வதுடன், மேலதிகக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு சட்டபூர்வ அல்லது உருப்படியான கடப்பாட்டினைக் கொண்டிருக்கமாட்டாது.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் தகுதியான சகல ஊழியர்களும் வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதியத்தினால் அடக்கப்பட்டுள்ளதுடன், இடம்பெறுகின்ற போது நிதிசார் கூற்றுக்களில் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**3.5.2.2 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்**

வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டமொன்றை விட, தொழிலுக்குப் பிந்திய நன்மையொன்றே வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டமொன்றாகும். வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் தொடர்பில் நிதிசார் நிலையின் கூற்றின் அடையாளங் காணப்பட்டுள்ள பொறுப்பு அறிக்கையிடும் திகதியில் வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் எதிர்காலப் பெறுமதியாகும். LKAS 19இனால் பரிந்துரைக்கப்பட்டவாறு, முன்னீட்சிப்படுத்தப்பட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு தகைமைபெற்ற ஆயுட்கணக்கர் ஒருவரினால் வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடு கணக்கிடப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஆயுட்கணக்கர் பெறுமதியை மேற்கொள்வதென கம்பனி எதிர்பார்க்கின்றது.

வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியானது நன்மைகள் கொடுப்பனவாகும் நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், பொறுப்பின் நியதிகளுக்கு அண்ணளவாகும் முதிர்ச்சியின் நியதியைக் கொண்டுள்ளதும் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்வுகளைக் கழிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. சகல ஊழியர்களுக்கும் முதல் வருட சேவையிலிருந்து இளைப்பாற்று பணிக்கொடைகளுக்கான நிதிசார் கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும், 1983இன் இல.12 பணிக்கொடைச் சட்டத்தின் கொடுப்பனவின் கீழ், ஐந்து வருடங்களைக் கொண்ட தொடர்ச்சியான சேவையை முடித்த பின்னர் மட்டுமே ஊழியர் ஒருவருக்கான கொடுப்பனவுக்கான பொறுப்பு எழும். பொறுப்பானது வெளிவாரிரீதியாக நிதிப்படுத்தப்படாது.

LKAS 19– ஊழியர் நன்மைகள் என்பதன் ஏற்றுக்கொள்ளலுடன், அவை இடம்பெறுகின்றவாறு வேறு விரிவான வருமானத்தில் உடனடியான வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களிலிருந்து எழுகின்ற சகல ஆயுட்கணக்கர் ஆதாயங்களையும், நஷ்டங்களையும் கம்பனி அங்கீகரிக்கின்றது. இது கடந்த காலத்திற்கும் செல்லுபடியாகும் தன்மையுடன் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்படுள்ளது.

**3.5.2.3 குறுகிய கால நன்மைகள்**

கணக்கிடப்படாத அடிப்படையொன்றின் மீது குறுகிய கால ஊழியர் நன்மைகளும், கடப்பாடுகளும் அளவிடப்படுவதுடன், தொடர்பான சேவைகள் வழங்கப்படுவதனால் செலவிடப்படுகின்றன.

**3.6 ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவொன்றாக ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்பட்டால், நம்பகமாக மதிப்பிடக்கூடியதாக சட்டபூர்வமான அல்லது உருப்படியான கடப்பாடொன்றை கம்பனி கொண்டுள்ளதுடன், கடப்பாட்டினை இணக்குவதற்கு பொருளாதார நன்மைகளின் செலவீடொன்று அவசியமாகும் என்பது சாத்தியமானதாகும்.

**3.7 வருமானம்**

மொத்த விற்பனை வரிகள் மற்றும் வர்த்தகக் கழிவுகள் ஆகியவற்றை நிகர கம்பனி மொத்த விற்பனை விலக்கி வைக்கின்றது. கம்பனிக்கு வெளியே வாடிக்கையாளர்களுக்கான பொருட்களினதும், சேவைகளினதும் பொருட்பட்டியலாக்கல் பெறுமதியை மொத்த விற்பனை பிரதிநிதிப்படுத்துகின்றது.

**3.7.1 வருமானத்தை அடையாளங்காணுதல்**

நிறுவனத்திற்கு பொருளாதார நன்மைகள் பாயும் என்பதுடன், கொடுப்பனவு எப்பொழுது செய்யப்பட்டது என்பதற்கு அக்கறையின்றி, வருமானம் நம்பகமாக அளவிடப்படும் என்ற சாத்தியக்கூறு உள்ள அளவுக்கு வருமானம் அடையாளங்காணப்படுகின்றது. கொடுப்பனவினதும், புறநீங்கலான வரிகளினதும் ஒப்பந்தரீதியில் வரையறுக்கப்பட்ட காலங்களைப் பொறுப்புக்கெடுத்து கிடைத்த அல்லது கிடைக்கவுள்ள கரிசனையின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

**அ) பொருட்களின் விற்பனை**

சாதாரண செயற்பாடுகளின் மார்க்கத்தில் பொருட்களின் விற்பனையிலிருந்து வருமானமானது கிடைக்க அல்லது கிடைக்கவுள்ள கரிசனையினதும், நிகர திரட்டுக்களினதும், வர்த்தகக் கழிவுகளினதும் மற்றும் தொகை தள்ளுபடிகளினதும் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றது. வாடிக்கையாளருக்கு உரித்துரிமையின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்களும், நடுத்தீர்வைகளும் கைமாற்றப்பட்டுள்ளன, கரிசனையின் அறவிடல் சாத்தியமானதாகும் பொருட்களின் இணைந்துள்ள ஆகுசெலவுகளும், சாத்தியமான திரட்டும் நம்பகமாக மதிப்பிடப்பட முடியும், பொருட்களுடன் தொடருகின்ற முகாமைத்துவ சம்பந்தம் இல்லை மற்றும் வருமானத்தின் தொகை நம்பகமாக அளவிடப்பட முடியும் என்றவாறு நிறைவேற்றப்பட்டட்ட விற்பனை உடன்படிக்கையொன்றின் அமைப்பில் வழமையாக தூண்டக்கூடிய சான்று நிலவுகின்ற போது வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**3.8 வேறு வருமானம்**

திரண்ட அடிப்படை மீது வேறு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**அ) ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் விற்றொழித்தல் மீதான ஆதாயம்/(நஷ்டம்)**

குரூப்பினால் தக்கவைக்கப்பட்டுள்ள ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் மற்றும் வேறு நடைமுறை-சாராச் சொத்துக்களினதும் விற்றொழித்தல் மீதான ஆதாயம் அத்தகைய சொத்துக்களின் காவுகின்ற தொகையின் விற்றொழித்தல் மீதான நிகர விற்பனை வரும்படிகளிலிருந்தும், மற்றும் தொடர்பான விற்பனைச் செலவினங்களிலிருந்தும் நிகர விற்பனை வரும்படிகளிலிருந்து கழித்த பின்னர் இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளது. மீள்மதிப்பிடப்பட்ட ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணத்தினதும் விற்றொழித்தல் மீது அந்தச் சொத்து தொடர்பிலான மீள்-மதிப்பீட்டில் எஞ்சியுள்ள தொகை தக்கவைக்கப்பட்டுள்ள சம்பாத்தியங்களுக்கு நேரடியாக கைமாற்றப்பட்டுள்ளது.

**ஆ) கமக்காரர்களுக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து வட்டி வருமானம்**

கமக்காரர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து வட்டி வருமானம் திரண்ட அடிப்படை மீது இலாப அல்லது நஷ்டக் கூற்றில் அடையாளங்காணப்பட்டுள்ளது.

### 3.9 நிதி வருமானம்

அறவிடும் நன்மை சந்தேகத்தில் இல்லை என்றால், நேர அடிப்படையொன்றின் மீது திரண்டுள்ள வட்டியாக வட்டி வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (சொத்து மீதான பயனுறுதிவாய்ந்த விளைவை கணக்குக்கு எடுத்து).

### 3.10 செலவினங்களை அங்கீகரித்தல்

ஏற்பட்டுள்ள ஆகுசெலவுக்கும், வருமானத்தின் குறிப்பான விடயங்களின் சம்பாத்தியங்களுக்கும் இடையில் நேரடியான இணையொன்றின் அடிப்படையின் மீது இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வியாபாரத்தை நிருவகிப்பதிலும், அத்துடன் செயற்றிறனாக ஆதனத்தையும், பொறியையும் மற்றும் உபகரணத்தையும் பராமரிப்பதிலும் ஏற்பட்டுள்ள சகல செலவினங்களும் ஆண்டுக்கான இலாபத்தை அடைவதில் வருமானத்திற்குச் சுமத்தப்பட்டுள்ளது. இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றினை முன்வைக்கும் நோக்கத்திற்காக, செலவினங்கள் முறையின் செயற்பாடானது கம்பனியின் செயல்நிறைவேற்றத்தின் மூலக்கூறுகளை நியாயமாக முன்வைப்பதாகவும், எனவே அத்தகைய சமர்ப்பண முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர்கள் கருத்தினைக் கொண்டுள்ளார்கள்.

இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்றில் பூர்வாங்க மற்றும் தொழிற்பாட்டுக்கு முந்திய செலவினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. செலவினம் ஏற்பட்டுள்ள ஆண்டில் விரிவான வருமானத்தின் கூற்றுக்கு பழுதுபார்த்தல்களும், புதுப்பித்தல்களும் சுமத்தப்பட்டுள்ளன.

### 3.11 வரிச் செலவினம்

நடைமுறையிலான, பின்போடப்பட்ட வரி மற்றும் வேறு நியதியாக்க வரிகளை வரிச் செலவினம் கொண்டுள்ளது. ஒப்புரவில் மாற்றங்களின் கூற்றில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுக்கு அது தொடர்பினைக் கொண்டுள்ள அளவுக்கு புறநீங்கலாக விரிவான வருமானத்தின் கூற்றில் வருமான வரிச் செலவினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3.11.1 நடைமுறையிலான வரி

அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமானளவு இயற்றப்பட்ட வரி வீதங்களையும்,கொடுப்பனவுக்குரிய வரிக்கான முன்னைய ஆண்டுகள் தொடர்பில் கொடுப்பனவுக்குரிய வரிக்கான ஏதேனும் சீராக்கலையும் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கக்கூடிய வருமானம் அல்லது நஷ்டம் மீது எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுக்குரிய வரி அல்லது கிடைக்க வேண்டியது நடைமுறையிலான வரி என்பதாகும்.

நிதிசார் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறும், அத்துடன் 2006இன் இல.10, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறும் அத்துடன் அதற்காக தொடர்ந்த திருத்தங்களின் படியும் வருமானத்தினதும்,செலவினத்தினதும் மூலக்கூறுகள் மீது வருமான வரிக்கான ஏற்பாடு அடிப்படையைக் கொண்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் நடைமுறையிலானதும் மற்றும் முன்னைய காலங்களுக்குமான நடைமுறை வரிச் சொத்துக்களும், பொறுப்புக்களும் அளவிடப்படுகின்றன.

### 3.11.2 பின்போடப்பட்ட வரி

நிதிசார் அறிக்கையிடும் நோக்கங்களுக்காகவும், வரி நோக்கங்களுக்காகவும் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் காவும் தொகைகளுக்கு இடையிலான தற்காலிக வித்தியாசங்களை வழங்கி, ஐந்தொகையைப் பயன்படுத்தி பின்போடப்பட்ட வரி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அடையாளங்காணப்பட்ட பின்போடப்பட்ட வரிப் பொறுப்பின் மிகையில் முன்கொண்டு வரப்பட்ட வரி நஷ்டங்கள் விளங்கும் போது, நிதிசார் கூற்றுக்களில் பின்போடப்பட்ட வரிப் பொறுப்பு அடையாளங் காணப்படமாட்டாது.

### 3.12 பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள்/(நஷ்டம்)

அதன் சாதாரண பங்குகளுக்கு அடிப்படையிலான பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள் (EPS) கம்பனி முன்வைக்கின்றது. காலத்தின் போது நிலுவையாக உள்ள சாதாரணப் பங்குகளின் சராசரி எண்ணிக்கையினால் கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்குச் சாட்டப்படக்கூடிய இலாபத்தை அல்லது நஷ்டத்தைப் பிரிப்பதன் மூலம் அடிப்படையிலான EPS கணக்கிடப்படுகின்றது.

## 4. வழங்கப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள், ஆனால், அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு பயனுறுதியற்றது

சில புதிய கணக்கீட்டு நியமங்களும் மற்றும் பொருள்விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளதுடன், இவை அறிக்கையிடும் காலங்களாக 31 மார்ச் 2019க்கு கட்டாயமானதல்ல என்பதுடன், குருப்பினால் முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த புதிய நியமங்களினதும் மற்றும் பொருள் விளக்கங்களினதும் தாக்கம் குறித்து குருப்பின் மதிப்பீடு கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளது.

### i) SLFRS 16 குத்தகைகள்

குத்தகை பெறுனர்களினால் கணக்கீட்டினை ஆரம்ப நிலையாக SLFRS 16 பாதிக்கும் என்பதுடன், செயற்படுகின்றதும், நிதிப்படுத்துகின்றதுமான குத்தகைகளுக்கு இடையிலான நடைமுறையிலான வேறுபாட்டினை நியமம் அகற்றுவதுடன், உண்மைநிலையாக சகல குத்தகை ஒப்பந்தங்களுக்கு வாடகையைக் கொடுப்பனவு செய்வதற்கு சொத்தொன்றினதும்(குத்தகையிலான விடயத்தை பயன்படுத்துவதற்கான உரிமை) மற்றும் நிதிசார் பொறுப்பொன்றினதும் அங்கீகாரத்தை வேண்டுகின்றது. குறுகிய கால மற்றும் குறைந்த பெறுமதியிலான குத்தகைகளுக்கு விருப்புக்குரிய விதிவிலக்குகள் நிலவுகின்றன.

இலாபத்தின் அல்லது நஷ்டத்தின் கூற்று பாதிக்கப்படும். ஏனெனில் மொத்தச் செலவீனமானது உருமாதிரியாக குத்தகையொன்றின் முன்னைய ஆண்டுகளில் உயர்வானது என்பதுடன், பின்னைய ஆண்டுகளில் குறைவானதாகும். மேலதிகமாக, வட்டியுடனும், மதிப்பிறக்கத்துடனும் செயற்பாட்டுச் செலவீனம் பதிலீடு செய்யப்படும். இதனால், EBITDA போன்ற முக்கிய தசாப்த அளவுகள் மாற்றமடையும்.

நிதிசார் செயற்பாடுகளினுள் குத்தகைப் பொறுப்புக்கான முக்கியமான பகுதிக்கான பணக்கொடுப்பனவுகள் வகைப்படுத்தப்படுவதனால் செயற்பாட்டு பணப் பாய்வுகள் உயர்வாக இருக்கும். வட்டியைப் பிரதிபலிக்கும் கொடுப்பனவுகளின் பாகம் மட்டுமே செயற்பாட்டிலான பணப்பாய்வுகளாக சமர்ப்பிக்கப்படுவதற்கு தொடரலாம்.

குத்தகை வழங்குனரின் கணக்கீடு குறிப்பிடத்தக்க விதத்தில் மாற்றமடையாது. குத்தகையொன்றின் வரைவிலக்கணம் மீது புதிய வழிகாட்டலின் விளைவொன்றாக சில வித்தியாசங்கள் எழக்கூடும்.

SLFRS 16இன் கீழ், ஓர் ஒப்பந்தமானது கரிசனைக்கான பரிமாற்றமான நேரகாலமொன்றுக்கு அடையாளங்காணப்பட்ட சொத்தொன்றின் பயனைக் கட்டுப்படுத்துவதற்காக உரிமையை ஒப்பந்தம் வெளியிட்டால் குத்தகையொன்றைக் கொண்டிருக்கும்.

2019 ஜனவரி 1 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் நிதிசார் காலங்களுக்கு பயனுறுதி வாய்ந்ததாக விளங்கும் SLFRS 16 ஐ ஏற்றுக்கொள்வதன் முழுமையாக தாக்கத்தினை மதிப்பிடும் நடைமுறையில் குருப் உள்ளது.

### ii) 'கூட்டிணைவுகளிலும், இணை முயற்சிகளிலும் முதலீடுகள்' என்ற LKAS 28க்கு திருத்தங்கள், கூட்டிணைவுகளிலும், இணை முயற்சிகளிலும் நீண்டகால அக்கறைகள்

SLFRS 9ஐப் பயன்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படாத ஒப்புரவு முறைமையாக உள்ள கூட்டிணைவொன்றில் அல்லது இணை முயற்சியொன்றில் நீண்ட கால அக்கறைகளுக்கு கம்பனிகள் கணக்கு காட்டுதலை இந்தத் திருத்தங்கள் தெளிவுபடுத்துகின்றன.

2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

### iii) SLFRS 9 நிதிசார் கருவிகளுக்கு திருத்தங்கள் - மறுதலையான நஷ்டஈட்டுடன் முன்-கொடுப்பனவு அம்சங்கள்

பதிவழிக்கப்பட்ட ஆகுசெலவொன்றில் நிதிசார் பொறுப்பொன்று அளவிடப்படும் போது அது இந்த மீள்-அங்கீகாரத்தில் விளைகின்ற விதத்தில் திரிபுபடுத்தப்பட்டால், ஓர் ஆதாயம் அல்லது இழப்பு உடனடியாக இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை இந்தத் திருத்தம் உறுதிப்படுத்துகின்றது. மூலத்திலான ஒப்பந்த பணப்பாய்வுகளுக்கு, மூலத்திலான பயனுறுதிவாய்ந்த வட்டி விதத்தில் அழிக்கப்பட்ட திரிபுபடுத்தப்பட்ட பணப்பாய்வுகளுக்கும் இடையிலான வித்தியாசமாக ஆதாயம் அல்லது இழப்பு கணக்கிடப்படுகின்றது. நடைமுறையில் LKAS 39 இல் மாற்றமொன்றாக இருக்கக்கூடிய கருவியில் தொடர்ந்தும் இருக்கின்ற ஆயுளுக்கு மேலாக வித்தியாசம் பரவமுடியாது என்பதே இதன் கருத்தாகும்.

2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

**iv) IFRIC 23 'வருமான வரி பரிகரிப்பின் மேலாக உறுதியற்றதன்மை'**

LKAS 12 'வருமான வரியின்' அங்கீகார மற்றும் அளவீட்டுத் தேவைப்பாடுகள் எவ்வாறு வருமான வரி பரிகரிப்புக்கள் மேலாக உறுதியற்ற தன்மை உள்ளவிடத்து பிரயோகிக்கப்படுகின்றன என்பதை இந்த IFRIC 23 தெளிவுபடுத்துகின்றது.

வரி அதிகாரத்தைக் கொண்டவர்களால் இந்தப் பரிகரிப்பு ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற உறுதியற்ற தன்மை உள்ளவிடத்து நிறுவனமொன்றினால் பிரயோகிக்கப்படும் ஏதேனும் வரி பரிகரிப்பே உறுதியற்ற வரி பரிகரிப்பொன்றாகும். உதாரணமாக, குறிப்பானதொரு செலவினத்தை குறைப்பொன்றுக்கான அல்லது வரிதிரவமொன்றில் வருமானமாக குறிப்பிடாத விடயமொன்றை உள்ளடக்காததிற்கான கோரலொன்றுக்கான தீர்மானமொன்று வரிச்சட்டத்தின் கீழ் அதன் ஏற்றுக்கொள்ளலானது உறுதியற்றதென்றால் அது ஓர் உறுதியற்ற வரி பரிகரிப்பாகும். வரிவிதிக்கக்கூடிய இலாபம் அல்லது நஷ்டம், சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் வரி நஷ்டங்களினதும் மற்றும் கடன்களினதும் அத்துடன் வரி வீதங்களினதும் வரி அடித்தளங்கள் ஆகியன உட்பட விடயமொன்றின் பரிகரிப்பு தொடர்பாக உறுதியற்றதன்மையொன்று இருக்கின்றவிடத்து கணக்கிடப்படுகின்ற வருமான வரியின் சகல அம்சங்களுக்கும் IFRIC 23 பிரயோகமாகின்றது.

2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

**v) வருடாந்த மேம்படுத்தல்கள் 2015-2017**

பின்வரும் நியமங்களுக்கு சிறிய மாற்றத்தை இந்தத் திருத்தங்கள் உள்ளடக்குகின்றன.

I. SLFRS 3, 'வியாபார இணைப்புக்கள்' அது வியாபாரத்தின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் போது இணை செயற்பாடொன்றில் அதன் முன்னைய தக்கவைக்கப்பட்டுள்ள அக்கறையை கம்பனியொன்று மீள் அளவிடுகின்றது.

II. SLFRS 11, 'இணை ஒழுங்குகள்' - 'வியாபார இணைப்புக்கள்' அது வியாபாரத்தின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் போது இணை செயற்பாடொன்றில் அதன் முன்னைய தக்கவைக்கப்பட்டுள்ள அக்கறையை கம்பனியொன்று மீள் அளவிடமாட்டாது.

III. LKAS 12, 'வருமான வரிகள்' - அதே வழியில் பங்கிலாப கொடுப்பனவுகளின் சகல வருமான வரி பின்விளைவுகளுக்கு கம்பனியொன்று கணக்குகாட்டுகின்றது.

IV. LKAS 23, 'இரவல் வாங்கும் ஆகுசெலவுகள்' - அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு சொத்து தயாராக இருக்கின்ற போது, சொத்தொன்றை விருத்திசெய்வதற்கு மூலத்தில் செய்யப்பட்ட ஏதேனும் இரவலை பொதுவான இரவல்களின் அங்கமாக கம்பனியொன்று கருதுகின்றது.

2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

**vi) LKAS 19 க்கு திருத்தங்கள், 'திட்டத் திருத்தத்தின் கட்டுப்பாட்டின் அல்லது இலாபத்தின் மீது ஊழியர் நன்மைகள்**

நிறுவனமொன்றை பின்வருமாறு இந்தத் திருத்தங்கள் வேண்டுகின்றன:

I. திட்டத் திருத்தம், கட்டுப்பாடு அல்லது இணக்கப்பாடு ஆகியவற்றின் பின்னராக காலமொன்றின் எஞ்சிய பகுதிக்கு நடைமுறையிலான சேவையையும், நிகர வட்டியையும் நிர்ணயிப்பதற்கு புதுப்பிக்கப்பட்ட அனுமானங்களைப் பயன்படுத்துதல்.

II. சொத்து எல்லையின் தாக்கத்தின் காரணமாக ஏற்கனவே மேன்மிகையானது அங்கீகரிக்கப்படாதிருந்தாலும் கூட, கடந்த கால ஆகுசெலவின் அல்லது இணக்கப்பாடு மீதான ஆதாயத்தின் அல்லது இழப்பின், மேன்மிகையில் ஏதேனும் குறைப்பின் அங்கமாக இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் அங்கீகரித்தல்.

2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

**vii) SLFRS 3க்கு திருத்தப்பட்ட வியாபாரமொன்றின் வரைவிலக்கணம்**

வியாபாரத்தின் வரைவிலக்கணத்தை இந்தத் திருத்தம் வரையறுக்கின்றது. IASB இனால் கிடைத்த பின்னூட்டலின் பிரகாரம், நடைமுறையிலான வழிகாட்டலின் பிரயோகம் பொதுவாக அதிகளவு சிக்கலான என எண்ணப்படுவதுடன், வியாபார இணைப்புக்களாக தகுதிபெறும் மிக அதிகளவு கொடுக்கல் வாங்கல்களை அது விளைவிக்கின்றது.

2020 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

**viii) பொருள்விடயத்தின் வரைவிலக்கணம் மீது LKAS 1 க்கும் LKAS 8 க்குமான திருத்தங்கள்**

LKAS 1, 'நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பணம்' மற்றும் LKAS 8, 'கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலும், தவறுகளிலும் மாற்றங்கள்' மற்றும் ஏனைய SLFRS களுக்கு தொடருகின்ற திருத்தங்கள்

I. SLFRS கள் முழுவதும் பொருள்விடயத்தினதும் மற்றும் நிதிசார் அறிக்கையிடலுக்கு கருத்துரு சார்ந்த வரைச்சட்டத்தினதும் இணக்கமான வரைவிலக்கணமொன்றைப் பயன்படுத்துதல்.

II. பொருள்விடயத்தின் வரைவிலக்கணத்தின் விளக்கத்தினைத் தெளிவுபடுத்தல், அத்துடன்

III. அற்பமான தகவல் பற்றி LKAS 1 இன் வழிகாட்டலின் சிலவற்றை ஒன்றிணைத்தல்

2020 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு இந்தத் திருத்தம் பயனுறுதிவாய்ந்ததாகும்.

இதுவரை பயனுறுதிவாய்ந்ததாக விளங்குகின்றதும், நடைமுறையிலான அல்லது எதிர்கால அறிக்கையிடும் காலங்களில் அல்லது கண்ணுக்குத்தெரிகின்ற எதிர்காலக் கொடுக்கல்வாங்கல்களில் நிறுவனம் மீது பொருள்விடய தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றதுமான வேறு நியமங்கள் இல்லை.

## 5. நடந்து கொண்டிருக்கும் கரிசனை அனுமானத்தின் பொருத்தத்தன்மை

2019 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு ரூபா 1,817,576,166 கொண்ட நிகர நஷ்டமொன்றை கம்பனி அடைந்தது (முன்னைய ஆண்டு ரூபா 1,352,349,253) என்பதுடன், திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 6,234,978,109இனால் மொத்தச் சொத்துக்களை மீறின (முன்னைய ஆண்டு ரூபா 4,417,401,943). இந்த நிலைமைகள் நடந்துகொண்டிருக்கும் கரிசனையொன்றாக தொடர்வதற்கான கம்பனியின் தகுதி பற்றிய உறுதியற்றதன்மையை எடுத்துக்காட்டலாம்.

எனினும், திட்டமிடப்பட்ட மூலதனத்துடன் செயல்திட்டமொன்றை முகாமைத்துவம் முன்வைத்துள்ளது. இது எதிர்காலத்தில் திட்டமான பணப்புழக்கத்தையும், இலாபங்களையும் தோற்றுவிக்கும் என்பதுடன், ஏற்பட்டுள்ள நஷ்டங்களை ஈடுசெய்வதற்கு சபையினால் திட்டம் கண்காணிக்கப்படும். திட்டமிடப்பட்ட எதனோல் பொறி மீது மூலதனத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலாபங்களும், திட்டமான பணப் பாய்வுகளும் பிரதானமாக சாட்டப்படுவதுடன், அது கம்பனியின் பெருந்தோட்டம் அதன் விரும்பத்தக்க மட்டத்தை அடைகின்றது. அவ்வாறாக உற்பத்தியின் மட்டம் அதிகரிக்கப்படுகின்றது. கம்பனியில் நடந்துகொண்டிருக்கும் கரிசனை மீது தீர்மானத்தைச் செய்யும் போது இலாபத்தன்மையிலும், பணப் பாய்விலும் இவற்றின் தாக்கத்தை முகாமைத்துவம் மதிப்பாய்ந்துள்ளது. இதன் பிரகாரம், நடந்துகொண்டிருக்கும் கரிசனையொன்றாக தொடர்வதற்கு கம்பனி தகுதியைக் கொண்டிருப்பதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

*மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு*

| | | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| 6 | **வருமானம்** | | |
| | சீனியின் விற்பனை | **799,977,800** | 1,243,023,570 |
| | ENAஇன் விற்பனை | **1,223,650,000** | - |
| | | **2,023,627,800** | 1,243,023,570 |
| 7 | **வேறு வருமானம்** | | |
| | "C" சீனியின் விற்பனையிலிருந்து வருமானம் | **8,623,920** | 10,735,666 |
| | மொலாசஸ் விற்பனையிலிருந்து நிகர வருமானம் | **10,294,556** | 5,397,533 |
| | கமக்காரர் கடன்களிலிருந்து வட்டிவருமானம் | **10,831,001** | 25,188,403 |
| | கழிவு இரும்பு விற்பனையிலிருந்து வருமானம் | **1,942,502** | - |
| | நானாவித விற்பனையிலிருந்து வருமானம் | **806,531** | 49,801 |
| | உயிர-கூட்டுப்பசளை வருமானம் | **26,450** | - |
| | | **32,524,960** | 41,371,403 |
| 8 | **நிகர நிதி ஆகுசெலவுகள்** | | |
| 8.1 | **நிதி வருமானம்** | | |
| | வட்டி வருமானம் - REPO மூலதனம் | **37,462** | 30,210 |
| | | **37,462** | 30,210 |
| 8.2 | **நிதி ஆகுசெலவுகள்** | | |
| | பின்வருவனவற்றிலிருந்து கடன்கள் மீதான வரி | | |
| | LOLC ஹோல்டிங்ஸ் PLC | **176,794,324** | 101,460,220 |
| | LOLC பக்டர்ஸ் லிமிற்றெற் | **898,167,629** | 532,703,871 |
| | பிறவுண் அன்ட் கம்பனி PLC | **133,349,133** | 111,632,714 |
| | கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனி PLC | **53,712,587** | 49,581,017 |
| | மக்கள் வங்கி PLC | **42,013,907** | 170,882 |
| | இலங்கை வங்கி PLC | **1,973,006** | 8,412,381 |
| | சாக்கியா கப்பிட்டல் (பிறை.) லிமிற். | **287,499,996** | 287,499,996 |
| | கொமர்ஸல் ட்ரஸ்ட் ரெக்னொலிஜீஸ் (பிறை.) லிமிற். | **123,500,004** | 36,903,730 |
| | செலான் வங்கி PLC | **6,976,188** | - |
| | LOLC ∴பினான்ஸ் PLC | **16,127,761** | - |
| | ***பின்வருவன் மீதான வேறு அக்கறை*** | | |
| | நிதிக் குத்தகை கடப்பாடு மீதான வரி | **39,319,971** | 40,340,961 |
| | வங்கி மேலதிகப் பற்று | **24,095,254** | 24,813,987 |
| | | **1,803,529,762** | 1,193,519,762 |
| | **நிகர நிதி வருமானம்/(செலவினங்கள்)** | **(1,803,492,300)** | (1,193,489,552) |

*மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு*

| | | | |
|---|---|---|---|
| 9 | **வரி விதிப்பின் முன்னரான நஷ்டம்**<br>*பின்வருவன உட்பட சகல செலவினங்களையும் சுமத்திய பின்னர்* | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | **251,874,884** | 185,070,757 |
| | ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் உபகரணங்களினதும் மீதான | **624,357** | 340,297 |
| | உருப்படியற்ற சொத்துக்கள் மீதான பெறுமானப் பதிவழிப்பு | **33,877,450** | 36,199,707 |
| | உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான மதிப்பிறக்கம் | **9,800,000** | 9,800,000 |
| | காணியையும், கட்டிடத்தையும் பயன்படுத்துவதற்கான உரிமை மீதான | **474,022,724** | 366,463,380 |
| | ஆளணியினர் ஆகுசெலவுகள் (குறிப்பு 9.1) | | |
| | வெளிவாரி கணக்காய்வுக் கட்டணங்கள் | **275,000** | - |
| | கமக்காரர் கடன்மீதான பெறுமானக் குறைபாடு | **9,762,172** | - |
| 9.1 | **ஆளணியினர் ஆகுசெலவுகள்** | | |
| | சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் | **237,686,816** | 186,763,800 |
| | வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்ட ஆகுசெலவுகள் - EPF/ETF | **31,877,889** | 27,627,383 |
| | வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்ட ஆகுசெலவுகள் - இளைப்பாற்று | **14,816,385** | 14,308,725 |
| | வேறு பணியாளர் தொடர்பான செலவினங்கள் | **189,641,634** | 137,763,471 |
| | | **474,022,724** | 366,463,380 |
| | பணியாளரின் எண். | **1,013** | 924 |

| | *மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு* | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **10** | **வருமான வரிச் செலவினம்** | | |
| | **நடைமுறை வரிச் செலவினம்** | | |
| | நடைமுறை ஆண்டு இலாபம் மீதான வருமான வரிச் செலவினங்கள் | - | 4,589,788 |
| | | - | 4,589,788 |
| **10.1** | **நடைமுறை ஆண்டு மீதான கணக்கீட்டு இலாபத்தினதும், வரியினதும் மீளணக்கம்** | | |
| | வரிவிதிப்பின் முன்னரான நஷ்டம் | **(1,814,145,920)** | 1,342,938,332 |
| | வியாபாரம்சாராத வருமானம் | **(10,868,463)** | (25,218,613) |
| | திரட்டு அனுமதிக்கப்படாத செலவினங்கள் | **1,593,723,511** | 283,438,855 |
| | திரட்டு அனுமதிக்கப்பட்ட கழித்தல்கள் | **(505,033,020)** | (524,492,439) |
| | வரி நஷ்டம் | **(736,323,891)** | (1,606,210,529) |
| | வியாபாரம் சாராத வருமானம் | **10,868,463** | 25,218,613 |
| | வரி நஷ்டங்களின் பயன்பாடு | **(10,868,463)** | (8,826,514) |
| | வரி விதிக்கக்கூடிய வருமானம் | - | 16,392,098 |
| | 28%இல் வருமான வரி | - | 4,589,788 |
| | | - | 4,589,788 |
| **10.2** | **முன்காவப்பட்ட வரி நஷ்டங்கள்** | | |
| | முன்கொண்டுவரப்பட்ட வரி நஷ்டங்கள் | **6,268,247,845** | 4,667,863,830 |
| | ஆண்டின் போது எழுந்த வரி நஷ்டங்கள் | **736,323,891** | 1,609,210,529 |
| | ஆண்டின் போது வரி நஷ்டங்களின் பயன்பாடு | **(10,868,463)** | (8,826,514) |
| | ஆண்டின் இறுதியில் வரி நஷ்டங்கள் | **6,993,703,274** | 6,268,247,845 |
| **10.3** | **அடையாளங்காணப்படாத பின்போடப்பட்ட வரிச்சொத்துக்கள்** | | |
| | பின்வரும் விடயங்கள் தொடர்பில் பின்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் அடையாளம் காணப்படவில்லை | | |
| | ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | **(1,261,033,131)** | (1,053,567,912) |
| | கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசம் | **50,727,388** | 39,401,774 |
| | வரி நஷ்டங்கள் | **6,993,703,274** | 6,268,247,845 |
| | கழிக்கத்தக்க தற்காலிகமான கடப்பாடுகள் | **5,783,397,531** | 5,254,081,707 |
| | பிரயோகிக்கத்தக்க வரி வீதம் | **28%** | 28% |
| | பின்போடப்பட்ட வரிச் சொத்து | **1,619,351,309** | 1,471,142,878 |
| | | **1,619,351,309** | 1,471,142,878 |

நடைமுறையில் வரி சட்டவாக்கத்தின் கீழ் கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் காலாவதியாகமாட்டா. இந்த விடயங்கள் தொடர்பில் பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அடையாளங் காணப்படவில்லை. ஏனெனில் கம்பனியானது அதன் நன்மைக்காக பயன்படுத்துவதற்கு எதிராக எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் கிட்டும் என்பது சாத்தியமானதல்ல.

## 11 பங்கொன்றுக்கான பற்றாக்குறை

ஆண்டின் போது நிலுவையாகவுள்ள சாதாரண பங்குகளின் பெறுமதி சுமத்தப்பட்ட சராசரி எண்ணிக்கையினால் கம்பனியின் ஒப்புரவு உடமையாளர்களுக்கு சாட்டப்படக்கூடிய ஆண்டுக்கான நிகர நஷ்டத்தை பிரிப்பதன் மூலம் பங்கொன்றுக்கான பற்றாக்குறை கணக்கிடப்படுகின்றது.

| | 2019 | 2018 |
|---|---|---|
| ஆண்டுக்கான நஷ்டம் (ரூபா) | **1,814,145,920** | 1,347,528,120 |
| பணங்களின் உள்ள சாதாரண பங்குகளின் பெறுமதி ஏற்றப்பட்ட சராசரி எண்ணிக்கை | **101,176,473** | 101,176,473 |
| பங்கொன்றுக்கான பற்றாக்குறை (ரூபா) | **17.93** | 13.32 |

# கல் ஒய பிளான்டேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற்
## நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள்

12 **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| ஆகுசெலவு | 2017 ஏப்ரல் 1இல் உள்ளவாறு மீதி | மேலதிகங்கள் | 2018 மார்ச் 31இல் உள்ளவாறு மீதி | 2018 ஏப்ரல் 1இல் உள்ளவாறு மீதி | மேலதிகங்கள் | விற்றொழித்தல்கள் | 2019 மார்ச் 31இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **இறையிலி காணி** | | | | | | | |
| கட்டிடங்கள் | 34,793,703 | 136,270,418 | 171,073,121 | 171,073,121 | 24,101,236 | - | **195,174,357** |
| நிரந்தர காணி அபிவிருத்தி ஆகுசெலவு | 63,348,553 | - | 63,348,553 | 63,348,553 | - | - | **63,348,533** |
| தொழிற்சாலை - பொறி மற்றும் இயந்திராதிகள் | 878,429,652 | - | 878,429,652 | 878,429,652 | 24,389,268 | - | **902,818,920** |
| தொகுதி இயந்திராதிகள் | 17,119,925 | - | 17,119,925 | 17,119,925 | - | - | **17,119,925** |
| நீர் தூய்மைப்படுத்தல் பொறி | 5,426,456 | - | 5,426,456 | 5,426,456 | 1,684,030 | - | **7,110,486** |
| மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 6,232,781 | 688,129 | 6,920,910 | 6,920,910 | 1,375,394 | - | **8,296,304** |
| அலுவலக உபகரணங்கள் | 2,997,805 | 6,903,873 | 9,901,680 | 9,901,680 | 2,055,743 | - | **11,957,423** |
| கமத்தொழில் சாதனங்கள் | 27,096,069 | 7,684,688 | 34,751,657 | 34,751,657 | 9,902,320 | - | **44,684,177** |
| விடுதி உபகரணங்கள் | 7,317,922 | 563,380 | 8,081,002 | 8,081,002 | 342,778 | - | **8,423,780** |
| தொழிற்சாலை உபகரணங்கள் | 54,590,592 | 24,122,536 | 78,723,128 | 78,723,128 | 7,939,038 | - | **86,662,167** |
| ட்ரக்டர்கள் மற்றும் ட்ரெயிலர்கள் | 152,519,026 | 2,117,869 | 154,634,893 | 154,634,893 | 794,680 | - | **155,429,573** |
| கரும்பு அறுவடைக் கருவி | 2,060,000 | - | 2,060,000 | 2,060,000 | - | - | **2,060,000** |
| மோட்டார் சைக்கிள் | 319,480 | - | 319,480 | 319,480 | - | - | **319,480** |
| கணனி உபகரணங்கள் | 8,803,471 | 611,998 | 9,415,469 | 9,415,469 | 430,040 | - | **9,845,509** |
| நடமாடும் தொலைபேசிகள் | 750,660 | 565,638 | 1,315,698 | 1,315,698 | 129,000 | - | **1,444,676** |
| GPS கண்டுபிடித்தல் கருவி | 2,104,500 | - | 2,104,500 | 2,104,500 | - | - | **2,104,500** |
| வடிசாலை பொறி மற்றும் இயந்திராதிகள் | - | 1,027,438,048 | 1,027,438,048 | 1,027,438,048 | 2,439,135 | - | **1,029.877,183** |
| | 1,263,808,795 | 1,207,285,378 | 2,471,094,173 | 2,471,094,173 | 75,582,863 | - | **2,546,677,035** |
| **குத்தகை உடமை** | | | | | | | |
| கரும்பு அறுவடைக் கருவி | 159,036,027 | - | 159,036,027 | 159,036,027 | - | - | **159,036,027** |
| மோட்டார் வாகனங்கள் | 19,299,336 | 32,000,000 | 50,299,336 | 50,299,336 | - | - | **50,299,336** |
| ட்ரக்டர்கள் உடன் இன்பீல்டர் | 27,048,757 | - | 27,048,757 | 27,048,757 | - | - | **27,048,757** |
| ட்ரக்டர்கள் | 25,050,000 | 130,984,750 | 156,034,750 | 156,034,750 | - | - | **156,034,750** |
| | 229,434,120 | 162,984,750 | 392,418,870 | 392,418,870 | - | - | **392,418,270** |
| | 1,493,242,915 | 1,370,270,128 | 2,861,813,042 | 2,861,813,042 | - | - | **2,939,095,905** |

| ஒன்றுதிரண்ட மதிப்பிறக்கம் | 2017 ஏப்ரல் 1இல் உள்ளவாறு மீதி | மேலதிகங்கள் | 2018 மார்ச் 31இல் உள்ளவாறு மீதி | 2018 ஏப்ரல் 1இல் உள்ளவாறு மீதி | மேலதிகங்கள் | விற்றொழித்தல்கள் | 2019 மார்ச் 31இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| **இறையிலிக் காணி** | | | | | | | |
